கல்கி

நிறுவனர்:

28-7-68

விலை 20 காசு

இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

ராஜிமணாளன் தொகுத்தவை.

சூ: மந்திரக்காளி!

மந்திரத்தால் மாங்காய் விழுமா? என்று வேடிக்கையாகக் கேட்பார்கள்; மாங்காய் மட்டுமல்ல-மலைகளையே கூட வீழ்த்திக் காட்ட முடியும் என்பதற்கு இந்தியத் துணைக்கண்டம் எடுத்துக்காட்டாகி இருக்கிறது. மைசூரை அடுத்த கோவாவில் ஒரு கிராமத்தில் ஒரு பாலம் கட்டப்பட்டதாம். கட்டப்பட்ட இந்தப் பாலத்தை அதிகாரிகள் பார்வையிட்டார்களாம்; இதன் பின்னர் அது பொதுப் பயனுக்குத் திறந்துவிடப் பட்டதாம்! அரசுப் பதிவேடுகளில் இது பற்றியும் குறிப்பிடப் பட்டிருக்கிறதாம்! திடீரென்று ஒருநாள் அந்தப் பாலம் "காணமல்" போய்விட்டதாம். இது கட்டப்பட்டிருந்த "சின்னம்"கூட எதுவுமே இல்லையாம்! எப்படிப் போனது இது? எங்கே போனது என்று விசாரணை நடத்த முதலமைச்சர் பண்டோட்கர் உத்திரவிட்டிருக்கிறாராம்! பாலம் கட்டப்பட்டதா இல்லையா? கட்டப் பட்டதாக மட்டும் பதிவா? இதுதான் விசாரணையாம்! மந்திரத்தால் 'பாலம் காணமல்' போய்விட்டதோ என்னவோ!

ஆணவம் தலைதாழ்த்திப்போகும்!

கடந்த கிழமை மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அமைச்சர்களையும், நிதிக் குழுவையும் கண்டு பேச டில்லிநகர் சென்றிருந்தார்! விமான நிலையத்தில் விமானத்தை விட்டு இறங்கமுடியாத நிலை; கொட்டும் மழை! தமிழக அரசின் கார், விமானம் வரை வந்து தமிழக முதலமைச்சரை ஏற்றிக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை, மத்திய அரசின் ஒரு துணை அமைச்சருக்குக்கூட இந்த உரிமை உண்டாம்! ஒரு மாநில முதலமைச்சருக்கு—நாலரைக்கோடி தமிழர்களின் இதயங்களிலே குடியிருக்கும் முடிசூடா மன்னனுக்கு அனுமதி இல்லை! அந்தோ வடநாடே! இந்த அளவு சிறுமை படைத்தது ஏன்? அதிகார ஆணவத்துக்கு அடிமைப்பட்டுப் போனது ஏன்? இழிவை ஏந்திக் கொண்டது ஏன்? ஏன் ஏன் ஏன் என்று கேட்டுக் கொண்டே போகலாம்! ஆனால் அறிஞர் அண்ணா, அங்கு நடந்துகொண்ட பெருந்தன்மைக்கு முன்னால், இவை தலை தாழ்த்தித்தானே போகும்!

தமிழ் டெலிபோன் டைரக்டரி?

தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான டெலிபோன்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கான டைரக்டரிகள் ஆங்கிலத்திலேயே இருந்துகொண்டு வந்தது. அண்மையில் தனியார் நிறுவனம் ஒன்று அதனைத் தமிழில் வெளியிட்டு, முதலமைச்சர் அண்ணா அவர்கள் மூலம் வெளியிட்டும் வைத்தது. அதனைத் தொடர்ந்து அடுத்த வெளியீட்டைத் தமிழில் வெளியிட யாரும் விண்ணப்பிக்கவே இல்லையாம். இது தொடர்பாக விளம்பரம் செய்யப் பட்டும், ஒரே ஒருவர் தான் டெண்டர் நமூனா பெற்றுச் சென்றதாகவும். அவரும்கூட மனுப் போடவில்லையென்றும் தகவல் வெளியிட்டிருக்கிறார் அஞ்சல் துறை அதிகாரி. தமிழ் நாட்டில், தமிழ் பெற்றுக் கொண்டிருக்கிற ஏற்றத்துக்கு இது வருந்தத்தக்க செய்தியாகும். டெலிபோன் வைத்திருப்பவர்கள் ஆதரவு காட்டினால் தான் வெளியீட்டாளர்களும் முன்வரக்கூடும். தமிழ் வளர்ச்சிக் குழுவினர், இதுபற்றித் தகுந்த கவனம் எடுத்துக்கொண்டு செயல்படத் தொடங்கினால், குறைநீங்கிப் போகும்.

எதிர்கால அமைதிக்காக!

கேரள அரசியல், இந்தியத்துணைக்கண்டத்துக்கே ஒரு அறைகூவலாகிக் கொண்டிருக்கிறது. தங்களுக்குள் ஒரு பொதுக் கருத்தை உருவாக்கிக்கொண்டு, அதன் அடிப்படையில் செயல்பட்டால், அதனால் மக்களுக்கும் நன்மை கிடைக்கும்; ஆட்சியும் நிலையானதாக அமைய முடியும். அப்படியில்லாமல் அமைச்சர்களே தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டு தங்கள் சொந்த விவகாரங்களையெல்லாம்கூட மேடைப் பொருளாக்கிக்கொண்டு குழப்பம் விளைவித்துக்கொண்டு வருவது எந்தத் தரப்புக்கும் ஏற்றதாகாது. கூட்டணி அமைச்சரவைகளால், மக்களுக்கு நன்மை செய்யமுடியாது என்று காங்கிரஸ் பிதற்றிக்கொண்டு வருவதற்கு கேரளம் இலக்கியமாகி விடக்கூடாது. எதிர்கட்சிகளினாலும் நாட்டு மக்களுக்கு நன்மையுண்டு என்று எடுத்துக் காட்டினால் எதிர்காலமாவது அமைதியாகஇராதா?

உள்ளும், புறமும் எதிர்ப்பா!

இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற கொந்தளிப்புச் சூழ் நிலையால் தாக்குண்டிருக்கிற அயூப்கான் அதனைத் தணித்துக்கொள்ள வெளிநாடு போனாலும் போனார்! அங்கங்கும் பலமான அடிகள் விழுந்துகொண்டே இருக்கின்றன. இலண்டன் மாநகர், அதிபர் அயூப்கான் எப்படியாகி இருக்கிறார் என்றே எடுத்துக் காட்டி இருக்கிறது. "சர்வாதிகாரியே! வெளியேறு! இராணுவ வெறியரே, திரும்பிப் போ என்பன போன்ற முழக்கங்கள் அவரைப் பலமாகத் தாக்கி இருக்கின்றன. தீவர்த்தி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டு, அயூப்கானை எதிர்த்திருக்கிறது. அவரது படங்கள் சுட்டுச் சாம்பலாக்கப் பட்டிருக்கின்றன! அவர் எழுதிய நூற்களும், பாகிஸ்தான் அரசியல் சட்ட நூலும் எரி தணலுக்கு இலக்காகி இருக்கிறது! அதோடு அல்லாமல் எரியுண்டவற்றின் சாம்பல்—பாக் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும் என்றும் தெரிகிறது! அயூப்கான்கூட அதனைப் பெறவேண்டி இருக்குமாம்! யார் இப்படி நடத்தியது? இலண்டன் வாசிகளா? அல்ல, பாகிஸ்தான் குடியுரிமை பெற்றவர்கள்! இலண்டனில் படித்துக்கொண்டிருக்கும் பாகிஸ்தான் மாணவர்கள்! உள்ளும் புறமும் தனக்கு எதிர்ப்பு வலுப்பதனை மறைக்க, அதிபர் அயூப் புதிய திட்டம் போட விருக்கிறாராம்! அதன் எதிரொலி எப்படி இருக்குமோ!

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 28—7—68 இதழ் 1

அன்றாடச் சூளுரை!

கல்வி ஆண்டுத் தொடங்கிவிட்டது. பெரும்பான்மையான பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர் சேர்ப்பது முற்றுப் பெற்று பாடம் நடப்பது தொடங்கியாகிவிட்டது.

மாணவர்கள், தம் படிப்புக் காலங்களில், படிப்பு ஒன்றிலேயே முழுக் கவனம் செலுத்த வேண்டியவர்கள்; அப்படி இருந்தால்தான் தங்கள் எதிர்காலத்தை சீரோடும், சிறப்போடும் அமைத்துக்கொள்ள முடியும்; அதுதான் விரும்பத்தக்கது என்பது அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது ஆழமான நம்பிக்கையாகும், அதோடு வாய்ப்புக் கிடைக்கிறபோதெல்லாம் இதுபற்றி வலியுறுத்திப் பேசியும் வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சரின் இந்த எண்ணம், வருங்கால சந்ததியினரின் வாழ்வு வளமுடையதாக அமைந்திருந்தால்தான், அது நாட்டுக்கு நல்ல முறையில் பயன்பட முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்ததாகும்.

எனவேதான் மாணவர்கள், தம் படிப்புக் காலத்தில் படிப்பு ஒன்றிலேயே முழு அக்கறை காட்டவேண்டும் என்று வேண்டிக் கொள்ளப்படுகிறது.

அறிஞர் அண்ணா அவர்களுக்கும் சரி, பிற கழகத் தலைவர்கள் அத்தனைப் பேருக்கும் சரி, இவர்களுக்கு மாணவர்களோடு இருக்கின்ற உறவு — எந்த அளவு குடும்பப் பாசத்தோடு கூடியது என்பதை எழுதிக் காட்டித் தெரியப்படுத்தத் தேவை இல்லை.

கழகம் மாணவர்களுடன் நெருங்கிய உறவுகொண்டிருப்பதாலேயே, காங்கிரசுக் கட்சி, மாணவர்களிடையேயும் அரசியல் நச்சுக் கருத்துக்களைப் புகுத்தி, அந்தப் பிஞ்சு நெஞ்சங்களைப் பாழ்படுத்த முனைந்தனர் கடந்த ஆண்டு.

பதவிச் சுவையை இழந்துவிட்ட ஆத்திரத்தில் அவர்கள் கடந்த ஆண்டு மாணவர்கள் பக்கம் சாய்ந்து, பிரச்னைகள் பலவற்றைத் தோற்றுவித்து 'கரி பூசிக்' கொண்ட அனுபவம், சுவையானது; வருந்தத்தக்கது.

படிக்காமலேயே பட்டம் பெற நினைக்கிறார்கள் என்றுகூட மாணவர்கள் இழித்துரைக்கப்பட்டிருக்கிறார்கள் காங்கிரசுக்காரர்களால்! பேய்கள், வெறியர்கள் என்றெல்லாம் தூற்றப்பட்டிருக்கிறார்கள் பக்தவத்சலம் போன்றோரால்!

இவ்வளவு பழிகளையும் கூறிவிட்டு, தங்கள் கட்சிக்கு மட்டுமே மாணவர்கள் மீது அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொள்வதுபோல, சிலபல மாவட்டங்களில் தேசிய மாணவர் காங்கிரஸ் என்பதன் பேரால் மாநாடுகள் கூட்டி, முழக்க முழக்க அரசியல் சிந்தனையைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். உணர்ச்சி வயப்பட்ட சில அப்பாவி மாணவர்களும் காங்கிரஸ் என்ற சிலந்தி வலைக்குள் சிக்கி இருக்கிறார்கள்.

கடந்த கல்வி ஆண்டின் அனுபவம், அவ்வளவு விரும்பத் தக்கதாயில்லை. இவை அனைத்துக்கும் முழுக் காரணமும் காங்கிரசுக் கட்சியே யாகும்.

ஆட்சி அதிகாரத்தை இழந்துவிட்ட ஆத்திரத்தில் கடந்த ஆண்டு அவ்வாறு குதியாட்டம் போட்டார்கள் என்றால், மூன்று இடைத்தேர்தல்கள் மூலம் மூக்குடைபட்ட பின்னரும், தம் முகத்தில் பொது மக்களும், மாணவத் தோழர்களும், தூவெனக் காரி உமிழ்ந்துவிட்ட பின்னரும்கூட, அந்த ஆட்சி அதிகார அரிப்பு—பதவிச் சுவையின் நமநமப்பு இந்த ஆண்டும் மாணவர்கள் பக்கம் வந்து வாலாட்டப் பார்க்கிறது.

அண்மையில் சென்னையில் பேசிய முன்னாள் கனம் பக்தவத்சலம் அவர்கள் மாணவர்களுக்கும், கழக அரசுக்கும் இடையே பிளவுண்டாக்கத் தக்கவிதமாகப் பேசி கலக மூட்டிவிட்டிருக்கிறார்.

மாணவர்கள் பற்றி பேச, இந்த தமிழ் நாட்டில் யாருக்கு உரிமை இருந்தாலும், இல்லாவிட்டாலும் பக்தவத்சலனாருக்கு நிச்சயம் இருக்க முடியாது.

மாணவர்களுக்கு எதிராக அவர் தூக்கிப் பிடித்த துப்பாக்கியிலிருந்து வெடித்துக் குடித்த உயிர்களின் அவலக் குரல் இன்னும் நின்றுவிடவில்லை. பலிகொடுத்த பெற்றோர் தம் சோக கீதம், நிறுத்தப் பெற்றுவிடவில்லை.

இந்நிலையில், மாணவர்களுக்குப் பரிந்து பேசுவதாகக் கருதிக்கொண்டு, குழப்பமூட்ட முயலும் இழிச் சதியை, மாணவர் சமுதாயமும், பெற்றோர் சமூகமும் புரிந்துகொண்டு எச்சரிக்கையோடு இருக்கவேண்டிய நாள் இது.

மாணவத் தோழர்களுக்கு, படிப்புத் துறையில் எத்தனையோ பிரச்னைகள் இருக்கக்கூடும். எழுகின்ற பிரச்னைகள் எல்லாவற்றையும், தாயுள்ளத்தோடு, பாச உணர்வோடு கேட்டு, தீர்த்துவைக்க கரம் நீட்டிக் காத்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்.

எனவே, மாணவத் தோழர்களுக்கு நாம் அன்போடு விடுக்கும் வேண்டுகோள்—கல்வியாண்டு முழுதும் கல்விக்காகவே—கற்றுத் தேர்வதற்காகவே செலவிடுங்கள்! உங்களில் பல மேதைகள் இருக்கிறீர்கள்! பல விஞ்ஞானிகள் இருக்கிறீர்கள். பல முதலமைச்சர்கள் இருக்கிறீர்கள் என்பதுதான்.

அரசியல் விவகாரங்களைக் கவனிக்க தமிழகத்தில் அரசியல் கட்சிகள் இருக்கின்றன! உங்களுக்கு அரசியல் வேண்டாம்! அதன் நிழல்கூட உங்கள் மீது கல்வி முடியும் வரை விழவேண்டாம்! என்பதுதான்!

"எத்தகைய உணர்ச்சிக்கும் நாங்கள் இடம் கொடுக்கமாட்டோம்; எந்த கிளர்ச்சிக்கும் நாங்கள் பலியாகமாட்டோம்"—என்பது உங்கள் அன்றாட சூளுரையாக இருக்கட்டும்.

அது ஒன்றுதான் மாணவத் தோழர்களுக்கும் நாட்டுக்கும் நல்லதாக இருக்கும் என்பது இதுவரை நமக்குக் கிடைத்திருக்கிற அனுபவமன்றோ!

இலண்டனில் இருபது நாட்கள்

2. இலங்கையில் இருபத்திரண்டு நாட்கள்:

முதன் முதலாக நான் சென்ற வெளிநாடு இலங்கைதான். இருபத்திரண்டு நாட்கள் இலங்கையில் காரிலேயே சுற்றுப் பயணம் செய்தேன்.

இலங்கைப் பயணத்தை "வெளிநாட்டுப் பயணம்" என்று தமிழர்களிலே பலர் ஒப்புக்கொள்வதில்லை, காரணம், தமிழகத்தில் இருந்து இலங்கைத்தீவு கூப்பிடு தூரத்தில் இருப்பதுபோல் மிக அருகில் இருக்கிறது. அதுமாத்திரம் அல்ல, இந்தியாவோடு இலங்கையும் ஆங்கிலேய ஆட்சியில் இருந்ததால் இந்தியாவும் இலங்கையும் ஒன்று என்பது போன்ற ஒரு உணர்வு இருப்பதில் ஆச்சரியமில்லை.

ஒரு காலத்தில் இந்தியாவோடு' இணைந்த ஒரு நிலப்பரப்பாகவே இலங்கை இருந்திருக்கவேண்டும். சிலப்பதிகார காலத்தில் கன்னியாகுமரிக்கு தெற்கே இருந்த நிலப்பரப்பை கடல் கொண்டுவிட்டதுபோல் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைவெளி ஏற்பட்டிருக்கவேண்டும். மண்வளமும் தோற்றமும் இந்திய மலையாளப் பகுதி போலவே இலங்கை காட்சி அளிக்கிறது.

இலங்கைத் தீவை செம்மைப்படுத்தி வளமுள்ளதாக்கியவர்கள் தமிழர்கள்தான் என்பதை இலங்கையரும் ஒப்புக் கொள்கின்றனர். ஆங்கில ஆட்சியின் போது, இந்தியாவில் இருந்து தமிழர்கள் குடும்பம் குடும்பமாக இலங்கை சென்று காடு மேடெல்லாம் பாடுபட்டு பண்படுத்தினர் என்பது உலகறிந்த உண்மை.

இலங்கையில் தமிழர் சமுதாயம் அதிகமாக இருப்பது இலங்கையின் தனிநாடு தன்மைக்கு என்றைக்காவது ஆபத்து வந்துவிடுமோ என்ற அனுவசிய அச்சம் இன்று நேற்றல்ல, நெடுங்காலமாக, நான் இலங்கை சென்றபோதும் இருந்தது; இன்றும் இருந்து வருகிறது.

இலங்கை விமான நிலயத்தில் எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும், நான் கலந்து கொண்ட இதர நிகழ்ச்சிகளும் இலங்கைப் பத்திரிகைகளில் நன்கு பிரசுரிக்கப்பட்டன. என்னைப் பற்றி இரண்டொரு 'கார்டுன்' கள்கூட இலங்கை தினசரிகளில் பிரசுரமாயின. அந்தக் காலத்தில் இந்திய பத்திரிகைகள் கட்டுப்பாடாக தி. மு. க. நிகழ்ச்சிகளை "இருட்டடிப்பு" செய்து வந்தன. அப்படிப்பட்ட நேரத்தில் இலங்கைப் பத்திரிகைகளில் நல்ல விளம்பரம் சரியாகவோ தவருகவோ தரப்பட்டன.

என்னை கொழும்பில் உள்ள பெரிய ஹோட்டலான "கிரீன்லேண்ட்ஸ்"'ல் தி. மு. க. வினர் தங்க வைத்தனர். இலங்கை முழுவதிலும் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொள்ள தனிக் கார் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நான் இலங்கையில் விமானத்தில் இறங்கி இருபத்திரண்டு நாட்களுக்கு அப்புறம் கப்பல் ஏறுகிறவரைக்கும், நான் செல்லும் காருக்குப் பின்னுலே, தினசரி இருபத்தி நான்கு மணி நேரமும் இலங்கை போலீஸ் "செக்யூரிட்டி" கார் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. எனக்கு பாதுகாப்புக்காக வந்ததோ அல்லது என் நடவடிக்கைகளை கண்காணிக்க வந்ததோ என்பது முதலில் தெரியாது. ஆனுல் என் பாதுகாப்புக்குத்தான் என்பது பின்னர் தெரிந்தது.

நான் இலங்கை செல்லுமுன் — நான் இலங்கை வருவதாகத் தெரிந்தபின், எனக்கு எதிராக இலங்கையில் ஒரு சதி நடந்து, அதை போலீஸ் முன்கூட்டியே அறிந்ததின் பலனுகத்தான், அப்போது (1954-ல்) சாதாரண கட்சியகாவும், நபராகவும் இருந்த எனக்கு, ஆச்சரியப்படத்தக்க அளவில் என் காருக்குப் பின்னுல் போலீஸ் உடுப்பு இல்லாத போலீஸ் கார் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தது.

இலங்கையில் :எனக்கு எதிராக என்ன சதி? ஏன் ஏற்படவேண்டும்? இக் கேள்விகளுக்கு விடையாக அப்போது ஒரு சம்பவம் தமிழகத்தில், விருதுநகரில் நடைபெற்றது.

1953-54ல் தமிழகத்தில் தி. மு. க.வுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நல்ல உறவு கிடையாது. 1953 இறுதியில் விருதுநகர் நகரசபை வார்டு தேர்தல் ஒன்றில் என்னை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது. அதில் நான் வெற்றி பெற்றேன். கம்யூனிஸ்ட் கட்சிக்கு 111 (பட்டைநாமம்) ஓட்டுகள் மட்டும் கிடைத்தது.

இந்த வெற்றியை ஒட்டித்தான் நான் இலங்கை செல்வதாக விளம்பரப்படுத்தப்பட்டு இலங்கை சென்றேன். இலங்கையில் உள்ள கம்யூனிஸ்டுகள் ஏதோ விஷமத்தனமாக திட்டமிட்ட செய்தியை இலங்கை போலீஸ் அறிந்ததாலேயே நான் இலங்கையில் இறங்கியதில் இருந்து, திரும்பும்வரை எனக்கு போலீஸ் பாதுகாப்பு இருந்தது.

என்னதான் போலீஸ் பாதுகாப்பு இருந்தாலும் சில சதிகள் முறியடிக்கப்பட முடியவில்லை.

காந்தியடிகளுக்கு எதிராக சதி நடந்ததை அறிந்து போலீஸ் வழக்கத்திற்கு அதிகமாக பாதுகாப்பு கொடுத்தும் கோட்செ சுட்டதை போலீசால் தடுக்க முடியவில்லை.

இதேபோல்தான் இலங்கையில் எனக்கெதிராக நடந்த சதியை போலீஸ் முன்கூட்டி அறிந்து, எனக்கு பாதுகாப்பு தந்தும், சதியாளர்கள் செயலை போலீசார் தடுக்க முடியவில்லை.

(வளரும்)

ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.

ஜப்பானிய முறை

நான் 5 ஆண்டுகளுக்குள் இருமுறை ஜப்பான் சென்றேன். முதல் தடவை பார்த்ததைவிட இரண்டாவது தடவை அதிவேகமாகத் தொழில் துறையில் முன்னேறியிருந்தார்கள்.

தொழிற்சாலையில் தீவிரத்தோடு ஜப்பானியர் உழைக்கின்றனர். அதே அளவு தீவிரமான உற்சாகத்தோடு இரவுநேரங்களில் கலைநிகழ்ச்சிகளை அனுபவிக்கிறார்கள். இப்படி இரண்டிலும் தீவிர உற்சாகம் காட்டும் மக்களை உலகில் எங்காவது காணமுடியுமா என்பது சந்தேகமாகும்.

பணம் சம்பாதித்துக் குவிப்பதே மனிதனின் ஒரே லட்சியமாக இருக்கமுடியாது. ஆனால் ஜப்பானிய மக்கள் தொழில்துறையில் செயல்படுகிறார்கள். விவசாயத் துறையில் செயல்படுகிறார்கள். கலைத் துறையில் செயல்படுகிறார்கள். இந்தத் துறைகள் அனைத்திலும் ஒரேமாதிரியான அக்கறை செலுத்துகிறார்கள்.

ஜப்பானில் இருந்தபோது நான் சில நிகழ்ச்சிகளைக் கண்டேன் கீழ்த்திசையில் கலாசாரம் முழுவதையுமே அவை சிறப்பாகப் பிரதிபலித்தன.

ஜப்பான் நாட்டைப் பொருளாதாரத் துறையில் நாம் மிஞ்ச முடியாது. ஆனால் கலாசார வளத்தில் நம்மை யாரும் மிஞ்ச முடியாது.

ஜப்பான் நாடும் இந்தியாவும் கலைத் துறையில் கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும். நாடகம் சினிமா ஆகிய துறைகளில் ஜப்பானில் அற்புதமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானியரின் திறமையும் இந்தியாவின் கலாசார வளமும் சேர்ந்து இத்தகைய முயற்சிகளை வெற்றிகரமாக ஆக்கும். லாபம் தராவிட்டால்கூட கலை உறவு வளரும் இதுபோலவே அதிகஅளவில் கலாசாரத் தூதுகோஷ்டிகள் சென்றுவரவேண்டும்.

குடும்ப வாழ்க்கையில் நட்பு செலுத்துவதில் மனிதத் தன்மையோடு நடந்துகொள்வதில் இரு நாடுகளும் ஒன்று போன்றவை.

ஜப்பான், உலகில் இரண்டாவது நாடு என்ற இடத்தைப் பிடிக்கும் போட்டியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அதற்காகப் படுவேகமாகவும் மிகத் திறமையுடனும் பாடுபடுகிறது. தேசிய உற்பத்தியில் இப்போதே அந்நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்துவிட்டது.

வறுமை சூழ—பூகம்பம் பயமுறுத்த—இயற்கை அளித்த வளம் ஏதும் இல்லாமல் தொழில் துறையில் ஜப்பான் வளர்ச்சியடைந்தது ஒரு கேள்விக் குறியாக உலகிற்கு தோன்றுகிறது. ஆனால் இந்தியாவிற்கு ஜப்பான் கேள்விக்குறியல்ல, ஆச்சரியக் குறி.

விவசாயத் துறையில் ஜப்பான் நாட்டை நாம் பின்பற்றவேண்டும். அமெரிக்க முறை நமது நாட்டுக்கு ஒவ்வாது. ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கொண்ட பெரும் பண்ணையை பிரம்மாண்டமான இயந்திரங்களை வைத்து விவசாயம் செய்கிறார்கள் அமெரிக்காவில்.

ஆனால் ஜப்பானில் சிறு பண்ணைகள் 3 ஏக்கர் 5 ஏக்கர் 10 ஏக்கர் அளவில் சிறு பண்ணைகள் வைத்துள்ளார்கள்.

ஜப்பானியர்கள் நிலத்தில் வாழ்கிறார்கள். நாம் நிலத்தை நம்பி வாழ்கிறோம்.

ஜப்பானைப்போல பண்ணை முறையை இங்கே சோதனை செய்து பார்க்கவேண்டும். அதற்கேற்ற மாவட்டம் கோவை. கோவை விவசாயிகள் பண்ணை வைத்து தாங்களே நிலத்தில் இறங்கி விவசாயம் செய்வதில் பெருமையடைபவர்கள்.

இன்னும் சில மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு நிலம் எங்கே இருக்கிறதென்றே தெரியாது.

குத்தகை வாங்கும்போதுதான் நிலத்தைப் பற்றி நினைப்பார்கள். சிலர் இங்கு சென்னை காஸ்மா பாலிடன் கிளப்பில் அமர்ந்துகொண்டு இங்கேயே பணம் கொண்டுவா' என்று கணக்குத் தீர்த்துக் கொள்வார்கள். ஜப்பானியரோ நிலத்தின் அருகிலேயே வசிக்கிறார்கள்.

இருமுறை ஜப்பான் சென்றபோதும் நான் ஜப்பானிய கிராமத்திற்குச் சென்றிருந்தேன். ஜப்பானிய விவசாயியின் மகள் ஒருதமிழரை மணந்து கொண்டிருக்கிறார். அந்தப் பண்ணைக்குப் போயிருந்தேன். அவர்கள் நிலத்தின் அருகில் வாழ்கிறார்கள்.

இவ்வாறு தொழில் துறையில், விவசாயத் துறையில், கலைத் துறையில் மற்ற பல துறைகளில் ஜப்பான முன்னேறியது.

நான் அங்கு ஒரு நாடகம் பார்த்தேன். சிறிய குழுவினர் நடித்தனர். ஒரு காட்சியில் பெருத்த மழை சோவென்று கொட்டியது, மேடையில் எல்லாம் தண்ணீர் வழிந்தது. நாடகம் பார்த்தவர்கள் எல்லாம் மழையில் நனைந்ததாகவே உணர்ந்தார்கள்.

அடுத்த காட்சியில் மழையின் சுவடே தெரியவில்லை நீலவானமும் மலர்ந்த பூக்களும் கொண்ட காட்சி ஒரு நிமிடம்கூட இடைவெளி இல்லாமல் இந்த மாற்றத்தை நாடக மேடையில் எப்படி ஏற்படுத்த முடிந்தது?

அந்த நாடகத்தைப் பார்த்தபோது நமது கலைஞர்கள் ஒரிருவரை இங்கு அழைத்து வரவில்லையே என்று நினைத்தேன். நமது கலைஞர்கள் அங்கு போகவேண்டும். நாடகத் துறையிலும் திரை உலகிலும் ஏராளமான புதிய உத்திகளைத் தெரிந்து வரவேண்டும்.

கலாசார உறவு வளர ஜப்பான் தூதுவர் தமிழ் இலக்கியங்களை ஜப்பானிய மொழியில் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்யவேண்டும்.

தமிழகம் இன்றைய தமிழகம் அல்ல. அன்றைய தமிழகம் செழிப்புமிக்க தமிழகம். பொன்னும் பொருளும் நிறைந்திருந்த தமிழகம், கற்றறிந்த புலவர் பெருமக்களுக்கு ராஜமரியாதை தந்த பொற்காலத் தமிழகம் அது. அந்தப் பொற்காலத் தமிழகத்தைப் பற்றி ஜப்பானியர்கள் ஜப்பானிய மொழியிலேயே படிக்க இந்தியா ஜப்பான் கலாசார சங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுபோல ஜப்பானிய இலக்கியங்களைத் தமிழ் மொழியில் தரவேண்டும்.

இலக்கியத்தில் தான் ஒரு நாட்டின் ஆன்மாவைக் காணமுடியும். பொருளாதார முன்னேற்றமோ, அரசியல் முன்னேற்றமோ நிரந்தரமான மதிப்பைப் பெறமுடியாது, அந்த வகையில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே கலாசார உறவு பெருகவேண்டும். அது வளர்ந்து நீண்ட பயன்தர வேண்டும். அதற்கு இந்த அமைப்பு பெரும் சாதனைகள் புரியவேண்டும் என வாழ்த்துகிறேன்.''

இந்திய ஜப்பான் கலாச்சார சங்க வரவேற்பில்

—முதலமைச்சர் அறிஞர் அண்ணா

எச்சரிக்கை

—புலவர். மணிமுடிச் சோழன்—

பெரும்பள்ளி இறுதிநிலைத் தமிழ்ப்பாடத்தில்
 பைந்"தமிழ்த்தாய்" எனுந்தலைப்பில் அமைந்தி
 ருக்கும்
பெருங்கடலின்—தமிழ்க்கடலின்—அடிகள் தம்மின்
 பிழையில்லா கட்டுரையில் குறிப்பிட் டுள்ள
அருங்கருத்தை அவமதிக்கும் எண்ணத் தோடு
 அரைகுறைகள் சிலமுழக்கம் எழுப்பு கின்றார்!
வருங்காலத் தமிழகத்தின் தமிழி னத்தின்
 வளர்ச்சியினைத் தடுப்பதற்கே முயலு கின்றார்!

உண்மைக்குப் புறம்பானக் கருத்துக் கோர்வை
 உளதென்றும் உடனடியாய் அப்பா டத்தைக்
கண்டிப்பாய் எடுத்துவிட வேண்டும் என்றும்
 கண்ணில்லா குருடரெலாம் கேட்கின் றாராம்!
எண்ணத்தில் எழுகின்ற உணர்வை எல்லாம்
 எளிதாக இனிதாக எழுத பேசக்
கண்டெடுத்தத் தமிழ்மொழியில் கணுக்க ரும்பில்
 கல்வியெலாம் கற்பதனை விரும்பா மாக்கள்!

குழிப்பணத்தை வடமொழியை, தமிழைப் பார்த்துச்
 செய்துவைத்த சொத்தைமொழி உயர்ந்த தென்றே
இழிகுணத்தார் ஏதேதோ பேசு கின்றார்!
 எழுதுகின்றார்!! இனியதமிழ் மக்கள் எல்லாம்
தொழும்தாயை உயிர்மூச்சை ஒளிவி ளக்கைத்
 தமிழகத்து மாணவர்கள் போற்றிக் கற்க
அழுக்குமனம் கொண்டவர்கள் அலறு கின்றார்!
 அடிவயிறு எரிவதனைக் காட்டி விட்டார்!

பால்குடத்தில் தேன்குடத்தில் கலந்து விட்ட
 பிணமான வடமொழியை நஞ்சு தன்னை
ஆல்அருகாய் வளர்ந்திருக்கும் தமிழ்கெ டுக்கும்
 ஆரியத்தை அகற்றிவைத்துத் தமிழைக் காத்த
சால்புடைய மறைமலையின் அடிகள் தம்மின்
 சந்ததியை விழிக்கவைக்கும் கட்டு ரையை
நூல்அறிவு அற்றவர்கள் குற்றம் சொல்ல
 நுனிக்கொம்பு ஏறுகின்றார் என்ன விந்தை!

மூச்சடக்கி அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு
 மாக்களைப்போல் ஒலியெழுப்பி உச்ச ரிக்கும்
பேச்சறியா வடமொழியைப் பயில்வ தாலே
 பெருமையென எண்ணிவந்த மடமை போக
பேச்சினிக்கப் பேசிடுவோர் நெஞ்சி னிக்கப்
 பெருமகிழ்ச்சி அடைகின்ற தமிழைக் கற்று
தீச்சுடரின் ஒளிபோல அறிவைப் பெற்றுத்
 திகழுகின்ற அடிகள்உரை குற்ற மாமோ?

அறிவினிலே சிறந்துயர்ந்த ஆங்கி லேயர்
 அன்னைமொழி ஆங்கிலத்தைக் கற்றுத் தேர்ந்தே
பிறமொழியைக் கற்றறிய விரும்பு கின்றார்!
 பேசும்மொழி ஆங்கிலத்தை விட்டு விட்டுப்
பிறமொழியில் மோகமுற்றுக் கற்றுக் கொள்ளும்
 பேருண்டா? ஆளுண்டா? இதைய றிந்து
சிற்றேனும் தமிழ்நாட்டின் தமிழ மக்கள்
 செந்தமிழைக் கற்பதற்கு விழைந்த துண்டா?

தாய்இருக்கத் தாய்ப்பாலும் நிறைந்தி ருக்க
 தாய்ப்பாலே கொடுக்காமல் புட்டிப் பாலை
சேய்களுக்குத் தருகின்ற செயலைப் போல
 செந்தமிழை—தாய்மொழியைக் கற்றி டாமல்
பாய்கின்றோம் பிறமொழியைக் கற்ப தற்கு!
 பிஞ்சுமனம் வெதும்புகின்றக் கொடுமை கண்டே
தாய்மொயில் எளிதாக எல்லாம் கற்கத்
 தடையின்றி வளர்ந்துவரும் அறிவு" என்றார்.

பிறமொழியை இகழுகின்றார் அடிகள் என்று
 பதறுகின்ற கதறுகின்ற கும்பல் எல்லாம்
மறுபடியும் முறையாக அமைதி யாக
 முழுமையாக கட்டுரையைப் படித்துப் பார்க்கச்
சிரந்தாழத்தி வேண்டுகின்றேன்! அடிகள் தம்மின்
 செந்தமிழ நடைபுரிய வில்லை யென்றால்
அருகிருக்கும் தமிழறிந்த சான்றோர் தம்மை
 அணுகுங்கள் வெட்கத்தை விட்டுத் தள்ளி!

வடமொழியை இகழுகின்றார் அடிகள் என்று
 வம்பளந்து நிற்போரே! அடிகள் காட்டும்
திடமான கருத்துகளை மறுப்ப தற்குத்
 தெம்புண்டா? திறனுண்டா? இருந்தி ருந்தால்
உடன்மறுப்பு எழுதுவதை விட்டு விட்டு
 "உடைந்துவிடும் பாரத்தின் ஒருமைப் பாடு"
தொடர்வரும் இந்திக்கு மரணப் பாதை
 தான்கிடைக்கும் எனஎண்ணித் தாண்ட லாமா?

பள்ளியிலே பாடத்தை நடத்தும் போது
 பயிலுகின்ற மாணவர்கள் கையைத் தட்டி
எள்ளிநகை யாடுகின்றார்! என்றே செய்தி
 ஏடொன்றில் எழுதியுள்ளார்! ஆமாம்! உண்மை!
எள்ளிநகையாடுகின்றார் மாண வர்கள்!
 எப்போது? எவ்விடத்தில்? ஆரி யத்தின்
சொல்லொலித்துக் காட்டுகின்ற இடத்தில் தானே!
 இதைமறைத்து ஏதேதோ சொல்ல லாமா?

எழுத்தாளர் மன்றத்துக் கூட்டந் தன்னில்
 இனியதமிழ் நடையழகு அடிகள் தம்மின்
எழுத்துநடை தனைஇகழ்ந்த துரோகி தன்னை
 இந்நாட்டு மக்களெல்லாம் பொறுத்த தாலே
அழகுதமிழ் மொழிமூலம் கல்வி கற்க
 அடியெடுத்து வைப்பதற்கு வழிவ குக்கும்
எழுச்சிமிகுக் கட்டுரையை எடுக்கச் சொல்லி
 எழுதுகின்றார்! போர்க்கொடியைஉயர்த்துகின்றார்!

தாய்நாட்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டே
 தாய்மொழியை தமிழ்மொழியை இகழ்ந்துபேசும்
மாய்மால வித்தைஇனி பலித்தி டாது!
 மாத்தமிழை உயிர்மூச்சை இகந்து பேசும்
நாய்க்குரைப்பை மாணவர்கள் பொறுத்துக் கொள்ளும்
 நாளிந்த நாளில்லை! இதைய றிந்தும்
பாய்புலியை இடறுகின்ற குருட ராகிப்
 புலியாக விரும்பாதீர்! எச்ச ரிக்கை!!

ஐந்திணை அழகு:

“பாலை”

—கவிஞர் பி. மணிவேந்தன், எம்.ஏ.,

கூடலுக்குக் குறிஞ்சியெனும் திணையும் உண்டாம்
குலமகளிர் இல்இருக்க முல்லை உண்டாம்
ஊடலுக்கு மருதமெனும் ஒழுக்கம் உண்டாம்
உணர்வு தரும் இரங்கலுக்கு நெய்தல் உண்டாம்
ஆடலுக்கு வழியின்றி; ஆணும் பெண்ணும்
அணைப்பதற்கு வகையின்றி; அகமகிழ்ந்து
பாடலுக்கும் இ மின்றிப் ‘பிரிவு’ கூறும்
பாலைபாட வந்தபெருங் கடுங்கோ வா, நான்?

ஓதலென்று சொல்லுகின்ற பிரிவும் ஒன்று;
உடல்வலிமை அடல்மறவர் முழங்கிச் சென்று
சாதலுக்கும் அஞ்சாது களத்தைக் கண்டும்
சமர்செய்யப் பிரிகின்ற பிரிவும் உண்டு;
ஈதலுக்குப் பொருள்தேடச் செல்வான் தானே
இணைப்பறவை இதயத்தில் பாய்ச்சும் வாளே!
காதலியைப் பிரிவதனால் கடமை ஓங்கும்
கண்ணுக்குள் அருள்உருவக் காட்சி தூங்கும்!

பிரிவென்றால் இழிவென்றே எண்ண வேண்டாம்
பெருங்கடுங்கோ பாடியதே பிரிவினைத்தான்!
பரிவோடே இலக்கியத்தில் புலவ ரெல்லாம்
பாடியது பெரும்பாலும் பாலை யைத்தான்!
பிரிவென்ற வானத்தில் ஏக்கம் என்னும்
பிறைதோன்றிக் காதலியின் நுதலைக் காட்டும்!
அறிவோடு சிந்தித்தால் தெரியும்; அன்பின்
ஆழத்தைப் பிரிவொன்றே துலங்கக் காட்டும்!

அணியிருந்தும் என்னபயன் அழகில் லாமல்
அகமிருந்தும் என்னபயன் புறமில் லாமல்
மணியிருந்தும் என்னபயன் ஒளியில் லாமல்
மங்கையிருந்(து) என்னபயன் கற்பில் லாமல்
துணிவிருந்தும் என்னபயன் தெளிவில் லாமல்
துடுப்பிருந்தும் என்னபயன் படகில் லாமல்
பணிவிருந்தும் என்னபயன் பண்பில் லாமல்
‘பாலை’யிருந்(து) என்னபயன் பிரி(வு)இல் லாமல்

கொடியிருந்தும் என்னபயன் மலரில் லாமல்
கொள்கையிருந்(து) என்னபயன் பிடிப்பில் லாமல்
தடியிருந்தும் என்னபயன் வலுவில் லாமல்
தலைமையிருந்(து) என்னபயன் அறிவில் லாமல்
குடியிருந்தும் என்னபயன் கோல்இல் லாமல்
குயிலிருந்தும் என்னபயன் குரலில் லாமல்
நெடிலிருந்தும் என்னபயன் குறில்இல் லாமல்
நிலமிருந்தும் என்னபயன் நீர்இல் லாமல்!

சோலையில்லை; இசைபாடக் குயிலும் இல்லை
‘சுகம்’இல்லை; யாழ்மீட்ட வண்டும் இல்லை
சாலையில்லை; இருமருங்கும் நிழலும் இல்லை
சாய்ந்தாடும் மலரில்லை; மணமும் இல்லை
காலையிலே கூவுகின்ற சேவல் இல்லை
கவலைஇல்லை; கண்ணுக்குக் குளுமை இல்லை
பாலையெனும் பசுமையிலாப் பாழ் நிலத்தைப்
பாடென்றால் பாவியேன் என்ன செய்வேன்?

நஞ்சனைய காமுகனின் கையிற் சிக்கி
நடுங்குகின்ற இளம்பெண்ணின் இதயம் போலே
வஞ்சிக்கும் முதலாளி செயலைக் கண்டு
வருந்துகின்ற பாட்டாளி நெஞ்சம் போலே
கஞ்சிக்கும் வழியில்லா நிலையை எண்ணிக்
கலங்குகின்ற ஏழைமனங் கொதித்தல் போல
எஞ்சாது கொதிக்கின்ற பாலை; நாளும்
எரிநெருப்புக் கனல்கின்ற கொல்லன் சாலை!

படிக்காத முட்டாளின் ‘கூர்மை’ போல
பருக்கைக்கல் பரப்பெல்லாம் கூர்மை தோன்றும்
அடியெடுத்து வைப்பாரின் காலைக் குத்தும்
‘அறிவில்லாக் கூர்மை’யினால் பயன்தான் என்ன?
துடிக்கின்ற தமிழ்இளைஞர் தூய நெஞ்சம்
துரோகியரின் சதிச்செயலைக் கண்டு நாணி
வெடிப்பதைப்போல் பாலைநிலம் வெடித்தி ருக்கும்;
வெடிப்பிற்குள் வெங்கதிரோன் துடிப்பி ருக்கும்!

பொடிமணலைப் பொன்னாக்கி மகிழும் வெய்யோன்
பொழுதெல்லாம் காய்வதனால் மரங்கள் எல்லாம்
அடியிருந்து முடிவரைக்கும் தசையே இல்லா
அசல்எலும்புக் கூடாகத் தோற்றம் நல்கும்!
மடியேந்திச் சென்றாலும் செல்லாக் காசும்
மடக்கஞ்சன் கொடுங்கரமும் கொடுக்கு மாமோ?
அடிநோக ‘நிழல்’பிச்சைக்(கு) அலைந்திட் டாலும்
அக்கஞ்சன் நிலை,பாலை நிலையே யாகும்!

சுனையிருக்கும் நீரில்லா நிலையில்; அந்தோ
சுட்டெரிக்கும் பாலைவெயில் சுழல வைக்கும்
‘பிணை’யிருக்கும் ஆண்மானின் நிழலில்; பாவம்
‘பிடி’யிருக்கும் ஆண்யானை அருகி ருக்கும்;
மனையிருக்கும் காதலியை எண்ணி ஏங்கி
மனங்கலங்கும் காதலரின் நடையிருக்கும்!
முனையிருக்கும் வழிகிடக்கும் பருக்கைக் கல்லில்
முயற்கொம்பாய்ச் செழிப்பிருக்கும் பாலை அம்மா!

நல்லபசும் பால்திரிந்தால் தயிராய் மாறும்
நறுந்தேனும் திரிந்துவிட்டால் கள்ளாய்ப் போகும்
‘முல்லை’நிலக் காடும்உயர் ‘குறிஞ்சி’ மேடும்
முறைமையினில் திரிந்துவிட்டால் ‘பாலை’ யாகும்!
பல்காட்டிப் பகட்டாகத் திரிந்தால் பாரில்
பருவப்பெண் வாழ்க்கையுமே பாலை யாகும்!
சொல்வேறு செயல்வேறாய்த் திரிந்தால் நாடே
சுடுகாடாய் மாறிவிடும்; பாலை யாகும்!

[வேறு]

கதிரவன் ஒளிக்கதிர் நிலமகள் உடல்சுட
வெடித்திடும் கொடும்பாலை;
நதிமணல் நுதிபரல் நெருப்பெனக் கொளுத்திடும்
நிலம்அது தழல்பாலை;
முதிர்வினை கிளையொடும் இலையிலா மராமரம்
குராமரம் வளர்பாலை;
சதிசெயும் சழக்கரின் அழிமதி யெனவரி
நிழல்தனைத் தரும் பாலை!

குகைவரும் புலியெனக் கொலைவெறி மறவரின்
வழிப்பறி நவில்பாலை;
அகத்தினை அழகினை அருந்தமிழ் அழகுடன்
அளித்திடும் நிலம்பாலை;
மகளிரை மனையினைப் பிரிந்திடும் பிரிவினை
மொழிந்திடும் திணைபாலை;
முகஎழில் வனநகில் அனநடை மடமகள்
நினைவினைத் தரும்பாலை!

குடும்ப விளக்கு

கஸ்தூரி நடராஜன்.

நான் ஏறிப்போன பஸ் திண்டி வனத்தைவிட்டு தலைவியை விட்டுப் பிரிய மனமில்லாத தலைவனைப்போல, முக்கி முனகிப் புறப்பட்டது. அப்போது இரவு மணி எட்டு இருக்கும். ஊரே இருளில் அடைபட்டிருந்த நேரம். சில்லென்ற வாடைக் காற்று நான் அணிந்திருந்த ஆடையைத் துளைத்துக் கொண்டு என் உடலையே மறத்துப் போகும்படி செய்துகொண்டிருந்தது. நுண்ணிய அந்த காற்றுக்கு உண்மையிலேயே சக்திஇருந்திருக்குமானல் என் உடலினுள் புகுந்து என் இதயத்தைக் குளிரச் செய்திருக்கலாம். அதுதான் அதனல் முடியவில்லையே! என் உள்ளத்தைத் தொட காற்றைவிட நுண்ணிய பொருள் உண்டா? என்மனம் சிறிது யோசித்தது. காற்றைவிட லேசானது பறவையின் இறகு. அதைவிட லேசானது பெண்ணின் உள்ளம் என்று யாரோ ஒரு மேதை சொல்லிவைத்தார். ஆஹா......எவ்வளவு அனுபவ பூர்வமாக உய்த்து உணர்ந்து எழுதியிருக்கிருர். பெண்ணைவிட லேசான ஒருபொருள் உலகில் இல்லவே இல்லை என்று அழுத்தம் திருத்தமாக அல்லவா சொல்லியிருக்கின்ருர்.

திருவண்ணமலைக்குப் புறப்பட்ட பஸ் வேகமாகத்தான் போய்க் கொண்டிருப்பதாக நான் உணர்ந்தேன். என் பக்கம் அமர்ந்திருந்த அந்த இளம் ஜோடியும் எதையோ பேசிக்கொண்டு வந்தார்கள். அந்த சொற்கள் அறை குறையாக என் காதுகளுக்கு எட்டியது. பாவம் அவர்கள் எதையாவது பேசி தங்கள் இனிமையான வாழ்வை வளமாக்கிக்கொள்ளட்டும்; அவர்கள் அன்பு நீடூழி வாழட்டும். என் மனம் வாழ்த்தியது. பஸ்சின் வேகத்தைவிட என் எண்ணத்தின் வேகம் அதிகமாகியது. திருவண்ணமலையை எப்போது அடைவோம் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எந்த எண்ணமும் எனக்கில்லை அந்த நேரத்தில்.

சிறிது நேரத்திற்கெல்லாம் எதிரில் இருந்த பெரியவர் தனக்கடுத்திருந்தவரை நோக்கி, மலைக்கு இந்த வண்டி எப்போது போய்ச் சேரும் என்று கேட்டார். அடுத்து அமர்ந்திருந்த பிரயாணி, "ஏங்க இப்ப தானே காவக்காடு வந்திருக்கு; பஸ், இதற்கப்புறம் செஞ்சியிருக்கிறது; அங்கிருந்து இருபத்தி நாலு மைல் போகத் தேவையில்லையா? மணி எப்படியும் பத்தாகும்" என்ருர்.

"காவற்காடா?".....அப்படி ஒரு ஊரா?" என்ருர் பெரியவர்.

"ஆமாம், தேசிங்கு ராஜா இருந்த போது செஞ்சிக் கோட்டையைக் காவல் புரிந்த காவலர்கள் அந்த இடத்தில் உள்ள காட்டில் தங்கி காவல் காத்து வந்தார்களாம். அதனல்தான் இதற்கு காவற்காடு என்ற பெயர் வந்ததாம். ஆனல் இப்போது அதற்கு 'ஊரணித் தாங்கல்' என்று பெயரிட்டழைக்கின்ருர்கள்" என்று பேச்சை நிறுத்தினர்.

அவர்கள் பேசிய பேச்சு எனக்கு என்னவோ போல் இருந்தது.

எப்படியோ திருவண்ணமலைக்குப் புறப்பட்ட பஸ் செஞ்சிக் 'கோட்டைகள் இரண்டினூடே மிகவேகமாகப்போய்க் கொண்டிருந்தது. பகல் வேளையாய் இருந்திருந்தால் அந்தக் கோட்டைகளைக் கண்டு ரசித்துக் கொண்டாவது போகலாம்.

திருவண்ணமலையை பஸ் அடைந்தபோது மணி சரியாக பத்தரை. நேராக மறைமலைஅடிகள் தெருவுக்குப்போய் எனது நண்பரும் தமிழாசிரியருமான அருணகிரியின் வீட்டையடைந்து மெல்ல ஒருகுரல் அருணகிரி என்றழைத்தேன்.

உள்ளே ஒரே சிரிப்பொலி. ஆமாம் அருணகிரியும் அவரது இல்லாளும் எதையோ ரசித்துருசித்துச்சிரித்துக் கொண்டிருக்கவேண்டும். இல்லையேல் சிரிப்பொலி அவ்வளவு சுவாரஸ்யமாக இருந்திருக்க வேண்டியதில்லை. நாம் ஏன் அவரை அழைக்க வேண்டும். பாவம் அவர்கள் இன்பமாவது நீடிக்கட்டும் என நினைத்து. வளர்ந்தும் வளராமலும் இருந்த என் இளந்தாடியை ஆதரவோடு தடவிக்கொண்டு சிறிது நேரம் பேசாமல் மலையை நோக்கியவாறே நின்று கொண்டிருந்தேன்.

திடீரென்று கதவு திறக்கும் சத்தம் கேட்டுத்திரும்பிப் பார்த்தேன். ஆமாம் நண்பர் அருணகிரிதான்.

"யார்?" என்று என்னைக் கேட்டார். நான்தான்......அருணகிரி" என்றேன்.

"யார்?" மீண்டும் கேட்டார். ஒரு கணம் யோசித்துவிட்டு "நீயா! அன்பனு! வா...வா...உள்ளே வா. வந்து அதிக நாழியாச்சா? ஒரு குரல் கொடுக்கக்கூடாதா" என்ருர்.

"இல்லை...வந்து இரண்டு நிமிடம் தான் ஆகிறது; உன் வீடுதானே என்று யோசித்து திகைத்து நின்றேன்...அதற்குள் நீயே வந்துவிட்டாய்."

இருவரும் உள்ளே சென்று அறையில் அமர்ந்தோம்.

"இதுதான் உன் அறையா?" என்றேன்.

"ஆமாம், அன்பன். ஏன்?"

"இல்லே...நிறைய நூல்கள் வைத்திருப்பாய் என நினைத்தேன், ஒரு புத்தகத்தையும் காணவில்லையே" என்றேன்.

"ஏன்? இதோ இருக்கிறதே." என்று மேஜை அறையைத் திறந்து தெளிவுரையுடன் கூடிய திருக்குறள் ஒன்றை மட்டும் எடுத்துக் கொடுத்தார்.

"இவ்வளவுதானு? வேறு புத்தகங்கள் இல்லையா?" என்றேன்.

"இதில் இல்லாததொன்றில்லே. இதுவே போதும். வேறு புத்தகங்களுக்கு அவசியமில்லே." என்ருர்.

"விசித்திரமானவனப்பா நீ" என்றேன் நான்.

"இல்லே, உண்மையே அதுதான்" என்ருர் அமைதியாக.

"சரி, நீ, எப்போது உத்திர மேரூரை விட்டுப் புறப்பட்டாய்" என்ருர்.

"மாலை மணி நான்கு இருக்கும்." என்றேன்.

"காஞ்சியில் அப்பா எப்படி இருக்கின்ருர்? இன்னமும் உன்மீது அவருக்கு வெறுப்புதானு?

"அவருக்கு என்மீது வெறுப்பு என்பதைவிட என்னுல் அவருக்கு வெறுப்பு என்பதுதான்பொருந்தும்."

'சரி, எழுந்திரு சாப்பிட்டுவிட்டுப் பேசலாம். உங்கள் குறை என்றுமே தீராது."

"சாப்பாடு! அது அவசியமில்லே. நான் வருகிறேன்" என்று என் நாற்காலியை விட்டு எழுந்தேன்.

"ஏன்? இப்போதுதானே வந்தாய்! இதற்குள்ளாகவா? இந்த இரவு நேரத்தில் எங்கே போகப் போகிருய்?"

"இல்லே அருணகிரி, என்னைத் தடுக்காதே! உன்னைப் பார்க்கவேண்டும்; பார்த்து பத்து வார்த்தைகள் பேசவேண்டும் என்ற ஆசையில் வந்தேன். என் ஆசை நிறைவேறி விட்டது; நான் வருகிறேன்" என்றேன். அப்போது அவர் கலங்கிப் போனுர்.

"ஏன்? அன்பன் இப்படியெல்லாம் பேசுகிருய்? உனக்கு ஏதாவது கவலேயா? அப்பா மீது கோபமா?" என்ருர்.

"அம்மா இறந்து போனதுமே எனக்கு எந்த அன்பும் நிலேக்காது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்."

"அப்படி இல்லே அன்பன். தாய்க்குப் பின் தாரம் என்று சொல்வார்கள். உனக்குத் திருமணம் நடந்தால் எல்லாம் சரியாகிவிடும்."

"திருமணமானுல் எல்லாம் சரியாகிவிடுமா?"

"அப்படியானுல் திருமணமானவர்களின் வாழ்க்கையில் நிம்மதி கொஞ்சமா? அப்படியொரு சக்தி திருமணத்திற்கு உண்டு என்று நீ நம்புகிருயா?" நான் ஆத்திரப் பட்டு பட படவென்று பேசிவிட்டேன்.

"அன்பன், உன் மனதுள் எதையோ வைத்துக்கொண்டு பேசுகிருய் என நினைக்கிறேன். உள்ளதைச் சொல். உரிய வழி செய்யலாம்." என்ருர் அருணகிரி.

என்னை மீறி எனக்கே சிரிப்பு வந்துவிட்டது.

"உரியது...அது எது? என்பதெல்லாம் இவனுக்கா தெரியப் போகிறது என்று நினைத்தேன். "அருணகிரி, நான் வருகிறேன்; ஒரேஒரு வேண்டுகோள்..."

"சொல்" அருணகிரி ஆர்வமுடன் கேட்டார்.

' ஆமாம் நான் இறந்துபோனுலும் என்னை மறக்கமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுப்பாயா?"

"ஏன் அந்த சந்தேகம் உனக்கு?"

"இல்லே, என் இன்றைய நிலே எதிலும் நம்பிக்கையை அவ்வளவு சீக்கிரம் வைக்கும்படியாக இல்லே. மனிதன் தன்னை நம்பாதபோது தானே சத்தியத்தைத் துணைக் கழைக்கின்ருன்."

"என்னவென்று சொல்லப் போகிருயா? இல்லேயா?" அவர் கோபமாகக் கேட்டார். பொய்க் கோபமாகத்தான் அது இருக்கவேண்டும்.

"என்ன இருக்கிறது? என் வாழ்வை முடித்துக்கொள்ள காலேயில் திட்டமிட்டேன். உடனே உன்னைப் பற்றிய எண்ணம் வந்தது நமது நண்பனுயிற்றே; என் நலனை நாடுபவனுயிற்றே ... நன்றி மறக்கக் கூடாதல்லவா ... உற்ற நேரத்தில் மனத்தாலும்—பணத்தாலும் உதவி புரிந்தவனல்லவா? நீ. ஆகவே உன் மீது எனக்கொரு ஆசை கலந்த அன்பு. எனக்கு உன்னை, என் மரணப் படிகளில் இறங்கும் முன்பு சந்தித்து என் பயணத்தைத் தொடங்கலாம் என நினைத்து இங்கு வந்தேன்" என்றேன்.

"என்னைப் பார்த்தாகி விட்டதல்



நினைவிலிருத்துவீர்!

"மத்திய அரசு பலமாக இருந்தது—குப்த சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது — மொகலாய சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்! ஆனால், இன்று அந்தச் சாம்ராஜ்யங்கள் எங்கே?

"சரிந்த சாம்ராஜ்யங்களுடன் இப்போது இருக்கிற சாம்ராஜ்யத்தை ஒப்பிடுவதற்கு உள்ளபடியே வருத்தப்படுகிறேன்! அந்தச் சாம்ராஜ்யவாதிகள், தமது சாம்ராஜ்யங்களுக்கு அதிகமாக வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவுதான் ஏற்பட்டது என்பதை சரித்திரம் உணர்ந்தவர்கள் அறிவார்கள்.

"ஔரங்கசீப் காலத்தில் இருந்த வலுவான மத்திய ஆட்சிக்கு ஒப்பான மத்திய ஆட்சியை சரித்திரத்தில் காண முடியாது! ஆனால், அந்தச் சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று என்பதை, இன்றைய காங்கிரசார் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்!"

லவா? நீ, போகலாம் உன் விருப்பப்படி இறந்து போ!'' என்றார்.

எனக்கு ஆச்சரியமாகிவிட்டது. இவர் சிந்தை கலங்கிப் போய்விட்டதா என நினைத்து அவர் முகத்தை மின்சார வெளிச்சத்தில் உற்று நோக்கினேன். அவர் முகத்தில் எந்தவித மாறுதலையும் நான் அறிய முடியவில்லை.

'சரி, வருகிறேன்'' என்று புறப்பட்டேன்.

நில்! நீ, இறந்துபோவதைத் தடுப்பதற்காக நான் ஏதோ சொல்கிறேன் என்று நினைக்காதே. உன் இறப்பிற்குக் காரணம் தெரிந்துகொண்டால் மற்றவர்களிடம் சொல்லும்போது எனது நண்பன், இன்ன இலட்சியத்திற்காக — இன்ன தியாகத்தைப் புரிந்தான்; அப்படியொரு அருமையான நண்பருடன் பழகியவன் நான் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வேன். அதற்காக உன் உயர்ந்த எண்ணத்தை எனக்குச் சொல்லக்கூடாதா? அந்த பெருமையை எனக்களிக்கக் கூடாதா?''
எனக் கேட்டார் அலட்சியத்தோடு.

"சரி, கேள்''; நான் தொடர்ந்தேன்.

'வாழ்வில் வாலிபம் என்பது வானவில் போன்றதென்று சொல்வார்கள். அந்த வானவில் என் வயதிலும் தெரியத்தானே செய்யும். தெரிந்தது. ஆனால், கண்டு ரசிக்க முடியாத—உய்த்து உணரமுடியாத கானல் நீராகிவிட்டது. நானும் அவளைக் காதலித்தேன்; அவளும் என்னைக் காதலித்தாள். அவளை, என் உயிரினும் மேலாக நம்பினேன் — உண்மையைச் சொன்னேன். காட்டு மயிலான அவளை—வீட்டுமயிலாக்க நான் ஆசைகொண்டேன். என்னை எந்தவிதத்திலெல்லாம் கவர முடியுமோ அத்தனை விதத்திலும் கவர்ந்தாள்.''

"நல்ல அழகிபோல் இருக்கிறது?''

"ஆமாம், அப்படித்தான் மற்றவர்கள் சொல்லுகிறார்கள்.''

"ஏன்? உன்னால் சொல்ல முடியாதா?''

"நான், அவளிடம் கண்டு ரசித்தது அவளது புற அழகை அல்ல; அக அழகை. ஆமாம், அவள் அறிவால் அழகி — அன்பால் அழகி—இரக்கத்தால் அழகி. அவள் முகத்தில் எப்போதுமே இனிமையை, எளிமையை, இரக்கத்தை, அன்பை, ஆதரவைக் கண்டேன்; களித்தேன்! அதிலே திளைத்தேன். நான் நினைவோடு இருக்கும்போது நேரில் இருப்பாள், உறங்கும்போது என் கனவில் என்னுடன் இருப்பாள். ஆக என்னை விட்டகலாமலேயே இருந்தாள். நானும், என்னை மறந்தேன்—மற்ற வாழ்வுகள் அத்தனையும் துறந்தேன். அவள்தான் எல்லாம் என நினைத்திருந்தேன்.

அவள் என் அடுத்த வீட்டில் குடியிருந்தாள். நான் உறக்கத்தைவிட்டு எழுந்திருப்பேன். அவள்தான் என் நினைப்பில் இருப்பாளே — எழுந்ததும் பல் துலக்கும்போது நான் என் தோட்டத்துக்குப் போவேன். அவளும் அங்கே வருவாள். இருவரும் பார்த்துக் கொள்வோம். பார்வைகள் பரிமாற்றம் நடக்கும். ஆஹா ...அந்த பார்வைக்குதான் எத்தனை எத்தனை ஈர்க்கும் சக்தி. அவளின் பார்வை என்னை எங்கோ......நான் இதுவரை கண்டிராத உலகிற்கு அழைத்துப் போனது. அவளின் அன்பு வார்த்தைகள் அமுதமாக இனித்தன. அவளைப் பார்க்காமல் நானிருக்க மாட்டேன். என்னைப் பார்க்காமல் அவள் இருக்க மாட்டாள். அப்படியிருந்த நிலைமாறி பூகம்பமே ஏற்பட்டதுபோல, நாங்கள் இருவேறு துருவங்களாக்கப் பட்டோம்! நான் பிரயாணம் செய்யும் திசைவேறு; அவள் திசைவேறு ஆகிவிட்டது.

"காரணம்? அவளை அவளின் தகப்பனார் வேறு பிள்ளைக்கு நிச்சயித்தாரா?'' அருணகிரி இடை மறித்தார்.

'அப்படி இருந்தால் அவளை மன மார வாழ்த்தி வழி அனுப்பி இருப்பேனே! மேலும் அவள் என் வாழ்வில் செய்த தியாகமாக நான் கருதி மதிப்பேனே!''

'பின் என்ன காரணம் அன்பன்?''

"காரணம் — நல்ல காரணம்... நான் ... நான் ... ஆமாம் நான்தான்.

"அப்படியென்றால்?'' அருணகிரி சந்தேகத்திற்கிடையே கேட்டார்''

"நான் கேட்கின்ற கேள்விகளுக்கு நீ, சரியான பதில் தரவேண்டும்'' என்றேன்.

"சரி கேள்''

"நான், அவளைக் காதலித்தேன் இல்லையா?''

"ஆமாம், நீ தானே சொல்கிறாய்''

"திருமணம் செய்து கொண்டால் தான் குடும்பம் நடத்த வேண்டுமா? அதற்கு முன்பு குடும்பம் நடத்தினால் என்ன?"

"அப்படியானால், நீ அவளை திருமணத்திற்கு முன்பு குடும்பம் நடத்த உன்னுடன் அழைத்தாய்; அப்படித் தானே?"

"ஆமாம் தவறு?"

"அன்பன், நீ, இனி ஒன்றும் எனக்குச் சொல்லவேண்டியதில்லை. திருமணத்திற்கு முன்பு அவளை உன்னுடன் வாழ அழைத்தாய். அவள் அதற்கு சம்மதிக்கவில்லை. உனக்கு அவள் மீது கோபம். ஆகவே வெறுத்துவிட்டாய் என் பதைவிட, திருமணத்திற்கு முன்பு உன் உணர்ச்சிப் பசிக்கு இரை கேட்டிருக்கிறாய். அப்படித்தானே?"

"அப்படியும் வைத்துக் கொள்வோம். அது என்ன தவறு?"

"நிச்சயம் தவறுதான்."

"உ...ம்...பின் என்ன நடந்தது?"

"நடக்க என்ன இருக்கிறது...... நான், கலங்கிப் போனேன். எனக்கு அந்த ஊரிலேயே இருக்கப் பிடிக்க வில்லை. வேறு ஊர் போனாலும் வாழ முடியாது என்ற முடிவுடன் வந்து விட்டேன். அமைதி எங்கே......... எங்கே என்று தேடினேன். அது இறப்பொன்றில்தான் சாத்திய பூர்வமாகும் என்று என் அனுபவம் உணர்த்தியது. ஆகவே, என்னை நான் அழித்துக்கொள்ள துடித்தேன். அதற்கு முன் உன் நினைவு வந்தது. வந்தேன்—பார்த்தேன்—போகிறேன்."

"அப்படியானால் உன் முடிவு..."

"அதுதான்; சொன்ன முடிவுதான்"

"அன்பன், நீ, இறந்துவிடு. அதைப்பற்றி எனக்கொன்றும் கவலை இல்லை. ஆனால், இறப்பிற்கு முன்பு ஒரு வேண்டுகோள்... அதைச் செய்வாயா?"

"உம்...சொல்"

'இந்தா, இந்த அதிகாரத்தைப் படித்து எனக்குப் பொருள்சொல்" என்று விரிந்த திருக்குறளைக் கொடுத்தார். நானும் வாங்கிப் படித்தேன். அது, குறிப்பறிதல் என்ற அதிகாரம். படித்துக்கொண்டே வந்த நான், அவளின் குணங்கள் அத்தனையும் அதில் இருப்பதை அறிந்தேன். படித்து முடித்து அருணகிரியைப் பார்த்தேன்.

"என்ன? படித்தாகி விட்டதா" என்றார்.

"சொல்லட்டுமா என்றேன்"

"எனக்கு வேண்டாம் உனக்குப் புரிந்தால் போதும் என்றார்,

"எல்லாமே புதுமையாகத்தான் தோன்றியது. இந்த குறள்களில் ஒன்றுகூட குறையில்லாமல் அவளின் நடத்தைப்பற்றி சொல்வது போல் அல்லவா தோன்றுகிறது" என்றேன்

"புதுமை இல்லை, பழமைதான். உணர்வுத்தவறு, உன்னுடைய 'அவள்" திருவள்ளுவர் வகுத்த இலக்கணத்தில் இருந்து சிறிதும் பிறழாமல் நடக்கக்கூடிய நல்ல குடும்ப விளக்கு' நீ, வேண்டுமானால் இப்போது உன் ஊருக்குப் போய்ப்பார். அவள், உன் நினைப்பிலேயே உழன்று கொண்டு உன்மத்தம் பிடித்த நிலையில் இருப்பாள்" என்று நிறுத்தினார்,

"வேண்டாம் நானே வந்து விட்டேன்" என்ற பெண்குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தோம்.

அருணகிரிக்கு யார் என்று புரியவில்லை. எனக்குப் புரிந்து விட்டது.

"அருணா! நீயா? இங்கு எப்படி இந்த வேளையில்?"

"காதலுக்கு கண் ஒன்றுதான் இல்லை என்று சொன்னார்களேயொழிய இதயம் இல்லை என்று யாரும் சொல்லவில்லை. நீங்கள் நிச்சயம் இங்குதான் வந்திருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். அடிக்கடி அருணகிரி, அருணகிரி என்று சொல்லிக் கொண்டிருப்பீர்கள்; ஆகவேதான் உங்களைத்தேடி இங்கே வந்தேன். மேலும், உயர்ந்த ஒருவர்முன் நம் மனமாற்றங்களை வைக்கும் போது தான் அதற்குச்சரியான நீதி கிடைக்கும். இப்போது சொல்லட்டும்அவர். தவறு என்னுடையதா? உங்களுடையதா என்று". அவள் ஆவேசமாகப் பேசி நிறுத்தினாள்.

"தவறு......அது, இரண்டு பேருடையதும்தான்" அருணகிரி அமைதியாகச் சொன்னார் "காதலர்களான பின்பு திருமணத்தை ஏன்? தள்ளிப் போட்டீர்கள். அதில் வந்த குறைதான்! ஆக, கூடிய விரைவில் உங்கள் திருமணம் நடக்க வேண்டும். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். அதுவரை அருணா என்னுடன் இருக்கட்டும். சரிதானே", என்றார்.

நான் ஒன்றும் பேசவில்லை.

"ஆண்டவனுடைய அடியையும் முடியையும் தேடி அருணாசலத்தை ஜோதிப் பிழம்பாய் கண்ட இடம் திருவண்ணாமலை என்று நான் படித்திருக்கிறேன். உங்கள் காதலின் ஜோதியை இங்கு கண்டு விட்டீர்கள். அதுவே போதும். அருணகிரி மென்மையாக சிரித்துக் கொண்டே உண்மையை விளக்கினார். அருணா — மதியத்துமுன் மயங்கி நிற்கும் அல்லிபோல நின்றிருந்ததை என்னால் முழுமையாக ரசிக்க முடிந்தது! ●

★ கிரேக்க நாட்டிலே ஒரு சிலப்பதிகாரம்!
★ காதல் தோல்வியால் ஒரு சாம்ராஜ்யத்தையே சரித்த பயங்கர சம்பவங்கள் மிகுந்த ஒரு வரலாற்றுப் படைப்பு......
★ அண்ணனுக்காக முடிதுறந்த தம்பியின் தியாக முத்திரை...

"வேடனும் வெண்புறுவும்"

தொடர் கதை!

எஸ். எஸ். தென்னரசு படைக்கும் புதுமை ஓவியம்!

அடுத்த இதழ் "காஞ்சி"யில் வெளிவருகிறது!

கேள்வி ? பதில்

1. கழக அரசை, எப்போதாவது காங்கிரஸ் பாராட்டி இருக்கிறதா?

பாராட்டா? அப்படி ஒரு பண்பு இருப்பது காங்கிரசுக்குத் தெரியுமா? லாட்டரி சீட்டு நடத்தியவர்கள் காங்கிரசு ஆட்சியினர் என்றாலும், கழகம் அதனையே செய்கிறபோது கண்டிக்க வருகிறார்களே! மாமியார் உடைத்தால் மண்சட்டி என்பது இதற்குத் தானோ என்னவோ! இப்படிப் பட்டவர்கள் 'பாராட்டு' என்பதனை எப்படி அறிந்தவர்களாய் இருக்க முடியும்?

2. மக்களுக்கு நன்மை செய்வது என்றால் என்ன என்கிறது காங்கிரஸ்?

இதைப்போய் ஒரு கேள்வியாகக் கேட்டிருக்கிறீர்களே! காங்கிரஸ் அகராதிப்படி நன்மை செய்வது என்றால், உணவுப் பண்ட விலைகளின் குறைப்புக்கு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளாமலிருப்பது; வணிகர்களின் கொள்ளை லாப முறைக்கு ஊக்கமளிப்பது; பண்ட தட்டுப்பாடுகளை செயற்கையாக உண்டாக்குவது; விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளாமலிருப்பது; தமிழை அழித்துவிட்டு, அந்த இடத்தை இந்திக்குத் தருவது; நாட்டின் பொது அமைதியைக் கெடுப்போரை தட்டிக் கொடுத்து பேணுவது; தொழிலாளர்—முதலாளி பிரச்னைகளில் குழப்ப நிலையை மேற்கொண்டு இருதரத்தாருக்கும் தொல்லைகளை அதிகப்படுத்துவது போன்ற செயற்கரிய செய்வன என்பது தான் பொருள் என்கிறது போலும்!

3. தமிழகம்தவிர, வேறு மாநிலங்களில் லாட்டரிச் சீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

பஞ்சாப் மாநிலத்தில் துவக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துவிட்டதாகவும், அரியானாவில் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், ஒரிசா ஏற்கெனவே பயனடைந்துவருகிறதென்றும் தெரிய வருகிறது. மற்ற மாநிலங்களும் இம்முறையை மேற்கொள்வது பற்றி ஆலோசனை செய்வதாகவும் தெரிகிறது.

4. லாட்டரி சீட்டு நடத்தும் உரிமை மாநிலங்களுக்கு இல்லை என்று மொரார்ஜிதேசாய் பேசி இருப்பதுபற்றித் தங்கள் கருத்து என்ன?

மொரார்ஜி தேசாய்க்கு, இந்தியத் துணைக்கண்டம் பல மாநிலங்களாக இருப்பதுகூடப் பிடிக்கவில்லைதான். அனைத்திந்தியாவும் மத்திய அரசின் ஏகபோக பிடிக்குள் வந்துவிட்டால் அப்புறம் இந்திக்கு மட்டுமல்லாமல், தங்கள் விருப்பம்போல அரசியலை நடத்திச் செல்ல முடியுமே என்பது அவர் எண்ணம். உரிமை, அது, இது என்பதெல்லாம் ஒரு விதபயமுறுத்தல்கள். அவ்வளவே ஒழிய ஆக்கரீதியானதல்ல. லாட்டரி சீட்டு பற்றி, பஞ்சாப் அரியானாவில் மூச்சு விடவில்லையே ஏன்?

5. ரஷ்யா, பாகிஸ்தானுக்கு ஆயுத உதவிகள் செய்வதை எதிர்த்து இந்தியாவில் கட்சி ரீதியாக ஆர்ப்பாட்டம் செய்வது நல்லதா?

ஜனசங்கத்தின் ஆர்ப்பாட்டத்தைக் குறித்துதானே இப்படிக் கேட்கிறீர்? நாட்டுப் பொதுநலனில் தங்களுக்கு மட்டுமே அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் ஒரு முறையே தவிர வேறு அல்ல இது. இதன் மூலம் பொது அமைதிக்கு உண்டாகும் கேடு பற்றி எண்ணிப் பார்க்கத் தவறிவிடுவதால் விளைகின்ற போராட்டங்கள்! மத்திய அரசு தான் எதிர்த்துக் கொண்டிருக்கிறதே என்று நினைத்துப் பார்க்காத தன்மை மட்டுமல்ல, இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் மூலம் பாராளுமன்ற, சட்ட மன்ற நாற்காலிகளுக்கு முன்னதாகவே 'ரிசர்வ்' செய்துகொள்ள நினைக்கும் செயலும் ஆகும் இது!

6. 21-7-68 'காஞ்சி' தலையங்கத்தில் மறைமலை அடிகளாரது கட்டுரையைஎதிர்ப்பது 'தமிழாசிரியர்கள்' என்று குறித்திருப்பதுபற்றி வருந்துகிறேன். தமிழாசிரியர்கள் அல்ல—தலைமையாசிரியர்கள்.

தமிழாசிரியர்கள் பலருக்கும் மனம் துணுக்குற்று இருக்கிறது. தமிழாசிரியர் என்று தவறாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பதற்கு மனப்பூர்வமான வருத்தத்தைப் படைத்துக்கொள்கிறோம்.

7. மதுவிலக்குத் திட்டத்தைத் தீவிரமாக்கக் கோரும் காங்கிரசாரில் எத்தனைப் பேர் குடிக்கிறார்கள் என்று கூற முடியுமா?

எத்தனைப் பேர் குடிக்கவில்லை என்று கேட்டால்தான் பதில் தர முடியும்போல் இருக்கிறது!

8. காமராஜ் பிறந்த நாள் விழா ஊர்வலத்தில் வந்த காட்சி வண்டிகளில் பல விரும்பத்தகாத காட்சிகள் இடம் பெற்றிருந்தன. குறிப்பாக போலீஸ்காரர்கள் இழிவு படுத்தப்பட்டிருக்கிறார்கள். தெரியுமா உங்களுக்கு!

ஊரும், உலகமும்புரிந்துகொள்ளட்டும் இந்த யோக்யதையை! குறிப்பாக இந்த காட்சி; முதலமைச்சர் இல்லத்தின் அருகேயே கொண்டுவந்து காட்டப்பட்டது. போலீஸ்காரர்கள் குடிப்பதுபோலவும், பெண்களை இழிவு படுத்துவதுபோலவும் காட்சி இருந்தது! காங்கிரஸ் பண்பு அவ்வளவுதான்! சுப்பிரமணியம் இதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறார்! மன்னியுங்கள் அவர்களை!!

9. சென்னைத் துறைமுகத்தில் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்யப்படுவது ஏன்?

மனிதனின் பிரச்னைகள் 'அன்றாடம்' பிறக்கின்றன என்பதை நிரூபித்துக் காட்டவோ என்னவோ!

10. மில்களில் நூல்களின் தேக்கத்துக்கு எது காரணமாக இருக்கக்கூடும்?

மத்திய அரசின் சில கொள்கைகள் என்பதோடு, நம் நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு, டெர்லின், டெர்லிக்ஸ், டிஷ்யூ போன்ற துணிகளின்மீது மிகுந்த அக்கறை ஏற்பட்டிருப்பதும் ஒரு காரணம் என்றே சொல்லவேண்டும்.

புலம்பல்கள் நின்றுபோகும்?

அன்புள்ள நண்பா!

'மனம்' இருக்கிறதே, அதனை ஒரு குரங்கு என்று கூறிப்போனவன் மிகப்பெரிய அறிஞனாகத்தான் இருக்க வேண்டும்; கிளைக்குக் கிளை, எந்த ஒரு இலட்சியமுமில்லாமல் தாவிக்கொண்டே இருக்கின்ற குரங்குக்கு மனத்தை ஒப்பிட்டுக் காட்டியது எவ்வளவு பெரிய மேதைமை!

> "ஆகஸ்டு முதல் தேதியன்று சென்னை நகரமே ஸ்தம்பிக்கும் போராட்டம் நடைபெறப் போகிறது."
>
> "அன்றையத்தினம் நடைபெறும் புதுமுறைப் போராட்டத்தால் சென்னை நகரமே கதிகலங்கிப் போகும்"

என்று காங்கிரசுக்காரர் ஒருவர் அறிவிப்புக் கொடுத்தார் ஜூலை மத்தியில்! ஆழ்ந்து கவனி நண்பா! காங்கிரசுக்காரர் ஒருவர் என்றுதான் கூறி இருக்கிறேன். போராட்டம் நடைபெறப்போகிறது; பொங்கி எழுங்கள் போர் வீரர்களே என்று சிம்மகர்ஜனை புரிந்திருக்கிறார் அவர். எப்படிப்பட்ட போராட்டம் தெரியுமா?

புதுமுறைப் போராட்டமாம்!

அந்தப் புதுமுறைப் போராட்டத்தால் சென்னை நகரமே ஸ்தம்பித்துப்போகும்; கதிகலங்கிப்போகும் என்று தெளிவாக்கி இருக்கிறார்.

"நானே தலைமையேற்கப் போகிறேன்" என்று அறிவிப்பு வேறு கொடுத்துவிட்டிருக்கிறார்!

நகரை ஸ்தம்பிக்கச் செய்து கதிகலங்க வைக்கவிருக்கும் ஒரு போராட்டத்துக்கு அவரே தலைமை வகிக்கப் போகிறாராம். ஏகாரத்தின் சிறப்பு உனக்குத் தெரியாதா என்ன?

> ஏககாலத்தில் நகரெங்கும் சூறையாடப் படும்;
>
> ஒரே நேரத்தில் தலைநகர் எங்கும் தீயிடப்படும்;
>
> தொழிலகங்கள் தாக்கப்படும்;
>
> மக்கள் வழிப்பறிக்கொள்ளைக்கு ஆளாவர்.
>
> போக்குவரத்துக்கள் தடுத்து நிறுத்தப் பட்டு, உடைத்து நொறுக்கப்படும்.
>
> கட்சிப் பணிமனைகள் மீது கல்லெறி நடக்கும்;
>
> கட்சித் தலைவர்கள் பயமுறுத்தப்படுவர்;
>
> சந்தர்ப்பத்தில் கொலைக்கும் ஆளாகக்கூடும்!

இதுபோன்ற ஒரு திட்டம் செயல்பட்டால்தானே நண்பா, நகரம் கதிகலங்கும்! ஸ்தம்பிக்கும்!!

இப்படிப்பட்ட கதிகலங்கச் செய்யும் ஒரு போராட்டத்தைத் தலைமையேற்று நடத்த வேண்டுமானால் எவ்வளவு விவேகம் இருக்கவேண்டும்? எத்துணைத் துணிவு இருக்கவேண்டும்? எவ்வளவு பெரிய இரும்பு நெஞ்சம் இருக்கவேண்டும்? எந்த அளவுக்கு 'வீரம்' கொப்புளித்துக் கொண்டிருக்கவேண்டும்?

கட்சிப் போராட்டம்கூட அல்ல — கட்சிக்காரர் போராட்டம்!! கட்சிப் போராட்டம் என்றால் காங்கிரஸ் செயற்குழுகூடி, உறுப்பினர்கள் காரசாரமாகப் பேசி விவாதித்து ஒரு முடிவெடுத்து—தலைவர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற சுப்பிரமணியம் அல்லவா அறிவித்திருப்பார்!

அறிவிப்புக் கொடுத்திருப்பவர், தன் பிறந்தநாள் விழாக் கூட்டத்தில் இதனை வெளியிட்டிருப்பதனால், இது 'அவரே நடத்தும்' போராட்டம்! காங்கிரசுக்காரர்களுக்குத் துளியும் தொடர்பில்லாத ஒரு போராட்டம்! கதிகலங்கச் செய்யும் போராட்டம்!!

சரி, கதிகலங்கச் செய்யும் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்துபவர் யார்? எப்படிப்பட்ட இயல்புடையவர்? இப்போதைய அவர் நிலைமை எத்தன்மையது? அவரேசொல்கிறார்! அதுவும் ஜூலையிலேயே சொல்கிறார்!

> உலகத்தில் எப்படி வாழ்வது என்பதைத் தவிர, மற்ற அனைத்தும் எனக்குத் தெரியும்!
>
> சராசரி வாழ்க்கையின் சாதாரண உண்மைகள் எனக்குப் புலப்படாமல் போய் விட்டன;

இப்படி தன் திறமையை எடுத்துக் காட்டிச் சொல்லி விட்டு, போராட்டம் ஏற்பாடு செய்து, தலைமை தாங்கவிருக்கிறாராம்!

உலகச் சூழலைப் புரிந்து, ஒட்டி ஒழுகக் கல்லாதவர் ஒரு அரசியல் வாதி! சராசரி வாழ்க்கையின் சாதாரண உண்மைகள்கூட புலப்படாத நிலையில் உள்ள ஒருவர் தலைமையில் போராட்டம்!!

கிடு கிடு போராட்டம் நடத்த விருப்பவரின் ஆற்றல் கண்டாய்! அவர் எப்படிப்பட்ட நிலையிலே இருப்பதாக அவரே கூறுகிறார் கேள் நண்பா!

"என்னைக் கொஞ்சநேரம் தனியாக
இருக்க விடுங்கள்;"

"நான் அழப் போகிறேன்!"

"என் துயரங்களைத் தலையணையில்
இறக்கி வைக்கப் போகிறேன்!"

"இனம் தெரியாத பயம் வருகிறது; கார
ணம் இல்லாமல் துணிச்சல் வருகிறது."

போராட்டத் தலைவர் அழப் போகிறாராம்! அவருக்குத் தனிமை தேவையாம்! நம்பிச் சென்ற அனைவராலும் கைவிடப்பட்ட நிலையில், அதனால் விளைந்த துயரங்களை தலையணையிடம் இறக்கிவைக்கப் போகிறாராம்! ஏன்?

"நான் ஒரு வலை பின்னினேன்! அதில்
நானே சிக்கிக்கொண்டேன்!

நான் ஒரு காடு வளர்த்தேன்; அதி
லிருந்து வெளியேற எனக்கே வழி தெரிய
வில்லை."

இதனால்தானாம்! யாருக்கோ வெட்டிய படுகுழியில் தானே வீழ்ந்துவிட்ட சோகக் குரல் ஒலிக்கிறதல்லவா! அங்கலாய்ப்பு அடங்கிவிடவில்லை; மேலும் தொடர்கிறது!

"இறைவனிடம் முறையிட வேண்டும்
போல இருக்கிறது;

இறைவன் தான் வரமாட்டேன் என்
கிறான்!

என்னைத்தான் அங்கே வரச் சொல்
கிறான்!

சீக்கிரம் போய்விடலாமா என்று எண்ணு
கிறேன்! கால்கள் சங்கிலிகளால் பிணைக்கப்
பட்டிருக்கின்றன!"

நிலைமை புரிகிறதா நண்பா! ஆபத்துக் காலத்தில்தான் ஆண்டவனை அழைப்பார்கள் சாதாரண நிலையில் இருப்பவர்கள். இந்தப் போராட்டத் தலைவர், இறைவனிடம் முறையிடுகிறார், தன்னை அழைத்துக் கொள்ளும்படி! வந்து அழைத்துப் போகவேண்டுமாம்! இறைவனின் கட்டளை, அந்தத் தலைவரை தற்கொலை செய்து கொண்டு, தன்னிடம் வா! என்பதாக இருக்கிறதாம்!

சீக்கிரம் போக நினைத்தும் இயலாத நிலையில் கால்கள் பிணைக்கப்பட்டிருக்கிறதாம்!

தற்கொலை எண்ணமே, பெரும்பாலும் வாழமுடியாத நிலையில், வாய்ப்புக்கள் அருகிவிடுகிறபோது மட்டுமே தோன்றக்கூடியதாகும். ஏதேனும் பயங்கரச் சதியைச் செய்துவிட்டு சிக்கிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டு, அதன் விபரீதம் காரணமாகத் தற்கொலை செய்துகொள்ள எண்ணுவோரும் உண்டு! இத்தகையோர் மிகச் சிலரே! அதனால் இத்தகையோரை ஒதுக்கிவிட்டு, 'தற்கொலை கோழைத்தனம்' என்று கூறி இருக்கிறார்கள் பெரியவர்கள்!

இறைவனிடம்போக விரும்புகிறேன்;
அவர் என்னை வரும்படி அழைக்கிறார்

என்பதன் பொருள் இதுதானே! கால்கள் கட்டிப் போடப்பட்டுள்ளனவாம், தற்கொலைகூட செய்து கொள்ள முடியாத நிலைமையில்!

வாழவும் தெரியாமல், சாகவும் முடியாமல், தத்தளித்துக் கொண்டிருக்கும் அவர்தான்—

"சென்னை நகரமேஸ்தம்பித்துப் போகும்
போராட்டம் நடத்தப்போகிறேன்;
போராட்டத் திட்டங்கள் கதிகலங்கச்
செய்யும்படியானதாக இருக்கும்."

என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்! சிரிக்காதே நண்பா! வெந்த புண்ணில் வேல் செருகுவது நம் பண்பல்ல! அதனால் சிரிக்காதே!

அவர், மாடிக்கும் கூடத்துக்கும் இடையே இருக்கிறார்! படியேறுகிறார்! கால்கள் கீழிறங்குகின்றன! தவிக்கிறார்!

மது மாடியிலிருக்கிறது!

என்று அங்கலாய்த்துக் கொள்கிறார்! கொள்கைப் பிரசாரகர்! இலட்சியத்தூண்! காந்திய நெறியைக் கட்டிக் காப்பதாக "சூள்" எடுத்துக்கொண்டு காங்கிரசுக்காக அல்லும் பகலும் ஆயிரமாயிரம் கவிகள் எழுதி மகாகவி ஆகிவிட்டிருக்கிறவர்!

மகாகவி என்று அவரை ஒப்புக்கொண்டு விடலாம்; இதற்கு முன்பாக இந்த மண்டிலம் பல மகாகவிகளைக் கண்டிராவிட்டால்!

இந்த மகாகவி, முன்னோர் நாள், "நான் இல்லால், தமிழ் இல்லை" என்றவர்தான்! அவ்வளவு ஆணவம் படர்ந்தவர்தான்!

இப்போது அழப்போகிறார்; கொஞ்சம்
அவரைத் தனியாக இருக்கவிடுங்கள்!

மதுவை அருந்திவிட்டுத்தான் அவர் அழுவார்—அதில் ஐயமில்லை. 'மது' உள்ளே போனதும் 'அறிவு' வெளியே வந்துவிடுகிறது என்பது மூதுரை! அதனால் அறிவினை வெளியே அனுப்பிவிட்ட பின்பு அவர் அழப்போகிறார்!

அந்த அழுகை ஆண்டவனின் காதுகளை எட்ட முடியாது. அறிவுத் தெளிவோடு இறைஞ்சுகிற இறைஞ்சுதலுக்கே ஆண்டவன் அடைக்கலம் தருவானாம்!

தெளிவற்றவர்களுக்குத் தேவாலயம்கூட திறந்திருக்க முடியாதுதான்!

எனவே நண்பா, ஒரு கோழையினால், கால்கள் கட்டப்பட்டு தளைப்படுத்தப்பட்டிருக்கும் ஒருவரால், தற்கொலை செய்துகொள்ளத் துடியாய்த் துடிக்கும் கவியால், பின்னிய வலையிலே சிக்கித்தவிக்கும் அவரால், காட்டுக்குள் சிக்கி மிருகபயத்தால் அலறித் துடித்துக்கொண்டிருப்போரால்—

கதிகலங்கச் செய்யும் போராட்டம்
நடத்த முடியாது!

ஏனென்றால்—

"எதை முழுதாகச் சொல்ல முடிய
வில்லையோ அதனை உளறிக்கொட்டுவது
என் வழக்கம்"

என்று அவரே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டிருக்கிறார்!

இதற்கு அப்புறமும் அவர் நகரையே ஸ்தம்பிக்கச் செய்யும் ஒரு போராட்டம் நடத்துவார் என்று நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாக ஆகிவிடாதா?

மதுப் போதையில் உளறிக் கொட்டி விட்டிருப்பதற்கு இவ்வளவு விமரிசனம் தேவை இல்லை என்கிறாயா நண்பா! உண்மைதான்! நீதிமன்றம்கூட இதனை நிரூபித்துக் காட்டித் தீர்ப்புவழங்கிவிட்ட பின்பு தேவையே இல்லைதான்!

ஆனால் நண்பா! அறிவிப்புக் கொடுத்தவர்—காங்கிரசின் பேரால் கொடுத்திருக்கிறார்! காங்கிரஸ் தலைவர்

அந்தோணி லாரண்ட் லவாசியர்

பிரான்ஸ் நாட்டு ஆணையாளரவை வழக்கறிஞர் ஒருவருக்கு 1743-ம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் அந்தோணி லாரண்ட் லவாசியர். இவர் தன்னுடைய 25-வது வயதில் விஞ்ஞானக் கழக உறுப்பினராக இருந்தவர். அதே சமயத்தில் வரி வசூலிப்போராகவும் படைக்கலக் கொட்டில் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர். இவரின் மனைவி பெயர் மேரி அன்னி பய்ரெட்.

இவ்வறிஞரால் கண்டுபிடிக்கப்பட்டவை முறையே பொருள்களின் அடர்த்தி கண்டுபிடித்தல், ஸ்டார்ச்சு தயாரித்தல் கப்பல்களில் தூய நீரைச் சேமித்துவைத்தல், விலையுயர்ந்த பட்டு, கம்பள ஆடைகளில் படும் கறையைப் போக்குதல், இரும்பு துருப்பிடித்தலின் காரணங்களை அறிதல், பட்டாசு செய்வதற்கான வெடி மருந்துகளின் சேர்க்கையைக் கண்டுபிடித்தல் முதலானவையாகும். இதனால் இவருக்கு இரசாயனக் கலையின் தந்தை என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

இரசாயனத்துறையில் இவர் ஆற்றிய பணி சொல்லிமாளாது. ஒருவன் மக்களின் நல்வாழ்வில் அக்கறைகொண்டு நாட்டுக்கு நல்லவை செய்யும்போது, அவனைத் தூற்றிப் பேசவும், தூக்கியெறியவும் உலகத்தின் எந்த மூலையிலும் ஆட்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். லவாசியரின்கண்டுபிடிப்புகளை சிலர் கேலி செய்தனர், முட்டாள் என்றும் தூற்றினார்கள். 1780-ம் ஆண்டு மாரத் என்பவன் நெருப்பின் இயற்கையைக் குறித்து ஒரு நூல் வெளியிட்டான். அதில் கண்ட தவறுகளை அறிஞர் லவாசியர் சுட்டிக் காட்டினார்—இதனால் கோபம் கொண்ட மாரத், தன்னுடைய செய்தித்தாளில் 'லவாசியர் வஞ்சகன்' 'கொடுங்கோலரின் கூட்டாளி' 'போக்கிரிகளின் துணைவன்' பாரிஸ் நகரத் தலைவனாக முயல்கிறான்' அவனை விளக்குத் தூணில் கட்டிப் போடவேண்டும்' என்றெல்லாம் கீழ்தரமான முறையில் எழுதி திருப்திப் பட்டுக்கொண்டான். இவற்றையெல்லாம் லவாசியர் சிறிதும் பொருட்படுத்தாததை நோக்கும்போது, அவரின் அஞ்சாத நெஞ்சம் நமக்கு வியப்பைத் தருகிறது.

பின்னால் மாரத் பலரை தன் கட்சியில் சேர்த்துக்கொண்டு விஞ்ஞானக் கழகத்தை மூடிவிட முயற்சி செய்தான். இதைக்கடுமையாகலவாசியர் எதிர்த்தார். அரசியலார்க்கு மாறாக நடந்துகொள்ள லவாசியர் முயற்சிப்பதாகக்குற்றம்சாட்டப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார். விசாரணையில் பிரான்சுக்கு எதிரான நாடுகளுடன் சேர்ந்துகொண்டு துரோகம் செய்ய எண்ணினார் என்ற பெரிய குற்றத்தை சுமத்தி மரண தண்டனை அவருக்கு அளிக்கப்பட்டது.

இவ்வுலகத்திற்குப் பயன்படக்கூடிய பல அதிசய இரசாயனப் பொருள்களின் பயன்களை ஆராய்ந்து அளித்த மேதை லவாசியர், தனக்கு மரண தண்டனை கொடுத்தளவிலும் கூறுகிறார் கேளுங்கள்:

> "நான் என் வாழ்வில் இன்பமாக நல் ஞானத்துடன் வாழ்ந்திருக்கிறேன். இப்போது நான் இறக்கப் போகிறேன். இதில் எனக்கு மகிழ்ச்சி என்னவென்றால் முதுமையின் துன்பங்களை ஏற்காமல் இன்பமாக செல்லுகிறேன் என்பதுதான். என் ஓயா உழைப்பில், உண்மையெனத் தோன்றியவற்றை மனவுறுதியுடன் சொன்னேன். என்னை சிலராவது புகழ்வர் என்பது உறுதி. மனிதனுக்கு வேறு என்ன வேண்டும் என்கிறாய்? அதனால் நான் புகழுடம்பை விட்டுச் செல்கிறேன்"

என்று தன் சகோதரர்கள்போல்பழகி வந்த நண்பர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

உலகிற்கு அவர் செய்த உதவியை மறந்து அரசியலும் மக்களும் அவருக்குக் காட்டிய நன்றி மரண தண்டனை. என்ன உலகமய்யா இது!

—ஆர். வெங்கடகிருஷ்ணன்

கள் இதுவரையில் இதுபற்றி எதுவும் எடுத்துரைக்கக் காணோம்!

மௌனம், சம்மதத்துக்கு அறிகுறி யென்றால், இந்தக் கவியின் கிடுகிடு போராட்டத்தை காங்கிரஸ் ஆதரிக்கிறது என்பதல்லவா பொருள்!

> இவர்,
> காங்கிரசுக்காரராக இருக்கத் தகுதி அற்றவர்—
>
> காங்கிரசின் எந்த நிகழ்ச்சியிலும், காங்கிரஸ்காரர் என்ற பேரால் கலந்துகொள்ளக் கூடாது.

என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிவிட்ட பின்பும் இது பற்றிய பதிலைக் காணவில்லையே! அதனால்தான் எழுத வேண்டி நேர்ந்துவிட்டது நண்பா!

குணம் நாடி, குற்றம்நாடி, மிகைநாடி, மிக்கக் கொளல் என்பது வள்ளுவமல்லவா! அதனால்!

நீதிமன்றத்தின் கண்ணுக்கு இப்போது ஒரே ஒருவர்தான் கொண்டு வந்து காட்டப்பட்டிருக்கிறார்! காலப் போக்கு பலரையும் சந்திக்கக்கூடும்.

அந்த நாள் வரும்போது, காங்கிரசுக் கட்சியில் மிஞ்சியவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள்! தலைவர் நிஜலிங்கப்பா உட்பட!!

அப்போது போராட்டக் குரலும் இராது! பிதற்றல்களும் எழாது! தலை இராது! தவிப்பும் இராது!

> "என் சிந்தனைகள் எனக்கே ஆறுதல் அளிக்கவில்லை"

என்ற அங்கலாய்ப்பும் எழத்தேவையில்லை!

வலை இராது; காடு இராது! பள்ளம் இராது! பாதாளம் இராது!

பரந்த வெளி இருக்கும்; நிர்மலமானவானமிருக்கும் தெளிந்த ஞானம் இருக்கும்! தெய்வ சிந்தனை இருக்கும். அப்போதுதான்—

அழுகின்ற குரல் ஆண்டவனை எட்டும்; அழைத்தவுடன் ஓடிவருவான்! அணைத்துக்கொள்வான்!

போராட்டங்கள் ஓய்ந்துபோகும்! புலம்பல்கள் நின்றுபோகும்! இல்லையா நண்பா!

அன்புள்ள,

திருவாரூர்-முத்துராமன்,

நாமாக விரும்பினால்தான்!

இப்பொழுது காங்கிரஸ் எதிர்க்கட்சியாக இருப்பதற்குக்கூடத் தகுதியான ஒன்றாக இயங்கவில்லை. மட்டரகப் பேச்சுக்களாலும், எழுத்துக்களினாலும் அழிந்து கொண்டிருக்கிறது. கோப்பையிலே குடி இருப்பவர்களைத் துணையாக நம்பிக் கொண்டிருக்கிறது 'அவர்' கோப்பையிலே குடி இருக்கமுடியாது. குண்டானில்தான் குடி இருக்க முடியும். பாவம் பரிதாபத்திற்குரியவர். இவரை காங்கிரஸ்காரார்கள் "கலியுகக் கம்பன்" என்று போற்றி துதி பாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

"வீட்டுக்கு வந்த மச்சான் விளக்கை ஏற்றி வைச்சான்; அதையும் மாற்றி இதையும் மாற்றி கதையை மாற்றி வைச்சான்" என்பது போன்ற மட்டரகப் பாட்டெழுதும் ஆசாமிதான் கலியுகக் கம்பனா? வெட்கக்கேடான செயல் இதைவிட வேறென்ன இருக்க முடியும்! இத்தகைய ஆசாமிகளுக்கு இடம் கொடுத்து இன்று காங்கிரஸையே குட்டிச் சுவராக்கிக் கொண்டு வருகின்றார்கள்.

"தேர்தலின்போது, காங்கிரஸ்காரர்கள் அடித்த சுவரொட்டி ஒன்று பார்த்திருப்பீர்கள்; அதில் ராஜாஜி, அண்ணா, இஸ்மாயில் சாயபு, ராமமூர்த்தி, ம. பொ. சி. முதலிய தலைவர்களை கழுதை மீது ஏற்றி, அச்சடித்து இருந்தார்கள். அந்தக் கழுதை மிகவும் நல்ல கழுதை, அது அவர்கள் அத்தனை பேரையும் நேராகக் கோட்டையிலே கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது. அங்கிருந்த பக்தவத்சலம் வெங்கட்ராமன், பூவராகன் ஆகியோரை தூக்கிக் கொண்டு வெளியே ஓடி வந்துவிட்டது.

இன்னும் இருபது ஆண்டுகள் போனால்கூட, இவர்களால் கோட்டைக்குள் வரமுடியாது, மக்களிடம் அந்த அளவுக்குச் செல்வாக்கு இழந்துகொண்டு வருகிறார்கள். செல்லாக்காசாகிவிட்டார்கள். இனி நாமாகப்பார்த்து, ஆட்சிப் பீடத்தை விட்டு இறங்கினாலொழிய காங்கிரஸ் நம்மை வீழ்த்திவிட்டு வருவது முடியாதஒன்றாகும். இதற்குத் தென்காசி தேர்தல் முடிவு நல்ல சான்றாகும்.

மொழிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் இந்தி இனி இந்த நாட்டிற்கு, எந்த காலத்திலும், எந்த வழியிலும், எந்த வகையிலும், எந்த முறையிலும் வரமுடியாது. அந்த அளவுக்கு சட்டம் செய்யப்பட்டு விட்டது. நாடெங்கிலும் தமிழ் அரசோச்சுகின்றது. பேருந்துகளில் திருக்குறள் பொறிக்கப்பட்டு, திருவள்ளுவர் படம் காட்சியளிக்கிறது. சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாக வகை செய்யப்பட்டிருக்கிறது, 'தமிழ் நாடு' எனப் பெயர் மாற்ற மசோதா கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இத்தகைய பெயர் மாற்றத்திற்குத் தான் பழம் பெரும் தேசபக்தர் காங்கிரஸ்காரர் சங்கரலிங்க நாடார் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தார். அப்பொழுது முதலமைச்சராக இருந்த பச்சைத் தமிழர் இதுபற்றி சட்டமன்றத்தில் குறிப்பிடும்போது "சோறு தின்னவில்லை. இறந்துவிட்டார். இதில் என்ன ஆச்சரியம்" என் ஆணவமாகப் பதில்சொன்னார். அந்த ஆணவத்தைத்தான் சங்கரலிங்கனாரின் ஆவி இந்த தேர்தலின் போது பழிவாங்கியது.

நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தனை தேவைகளையும் அண்ணாவின் ஆட்சி படிப்படியாக நிச்சயம் நிறைவேற்றியே தீரும். விருந்திற்காக சமையல் நடந்துகொண்டிருக்கும்போதே, விருந்து சரியில்லை எனக் குறைகூறுவது சரியில்லை. விருந்து சமைத்துப் பரிமாறிய பிறகு சாப்பிட்டுவிட்டுச் சொல்ல வேண்டுமே யொழிய, அரிசி, அடுப்பில் வேகும்பொழுதே விருந்து நன்றாக இல்லை என்பதில் பொருளில்லை. இந்த வேலையைத்தான், இன்று காங்கிரஸ் நண்பர்கள் செய்து வருகின்றார்கள். கழகம் ஆட்சி பீடமேறி பதினைந்து மாதம்கூட ஆகவில்லை. அதற்குள் அது சரியில்லை, இது சரியில்லை என்றால் அதைவிட முட்டாள்தனம் என்ன இருக்க முடியும்?

இனி, கழக அரசை, எந்த ஒரு சக்தியாலும், அசைக்க முடியாது; அகற்ற முடியாது.

—அரியலூர் கூட்டத்தில் சி. பி. சி

அவருக்குதான் தேவை!

தாமஸ் எல். கென்னடி என்பவர் ஒரு ரேஸர் கம்பெனியின் அதிகாரி. அவர் ஷாவுக்கு புதுவித ஸேப்டி ரேஸரை அனுப்பினார். அதோடு ஒரு சீட்டில் இப்படி எழுதி இருந்தார்.

'இத்தனை வருடம் கழித்து நீங்கள் தாடியை எடுத்துவிடப் போவதாகக் கேள்விப்பட்டேன். இந்தத் தகவல் உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. இருந்தாலும் இதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டதென்னவோ உண்மை. அப்படி சவரம் செய்துகொள்ளத்தான் —போகிறீர்களென்றால் என்னுடைய ஸேப்டி ரேஸரையே உபயோகிப்பீர் என்பது நிச்சயம்.''

இதற்கு ஷா எழுதிய பதில் என்ன தெரியுமா?

"நான் இதுவரையில் சவரம் செய்து கொண்டதே இல்லை. சவரக் கத்தியும் என்னிடத்தில் இல்லை. (தாங்கள் அனுப்பிய ரேஸர் இன்னும் கிடைக்கவில்லை.) எப்படியிருந்தாலும் தாடியை எடுப்பதாக உத்தேசமில்லை அடிக்கடி ஓரளவுக்கு மேல் வளராதபடி அதை கத்தரித்துவிட்டுக் கொள்கிறேன். என்னை எல்லோரும் பின்பற்றினால் பிறகு எவர்ஷார்ப் கம்பெனியார் மின்சாரக் கத்தரி தயாரிப்பதில் கவனம் செலுத்தவேண்டியதுதான்! தாங்கள் ரேஸர் அனுப்பியதற்கு முன்கூட்டியே வணக்கம் தெரிவிக்க விரும்புகிறேன். என் சரித்திரத்தை எழுதும் டாக்டர் லோவென்ஸ்டைன் அதை எடுத்துக் கொள்வார். அவர்தான் சவரம் செய்வதிலேயே பொழுதை வீணாகக் கழித்து விடுகிறாரே!"

—இ. சர்தார்மன்சூர்

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
66, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.